முரசொலி

ஆசிரியர் மு.கருணாநிதி

1 | சென்னை | 26 — 11 — 54 | வெள்ளி | ஒலி 35

# பரத்துவாஜர் ஆஸ்ரமமா -- பாரீஸ் நகரத்து 'பாரா'?

ஆஸ்ரமம்—அங்கே அப்சரஸுகளா?
முனிவர் கூடாரம் — அங்கே மோகக்களியாட்டமா?—
முத்திக்கு வழிதேடும் முகாம்—அங்கே முத்தத்தால் வீங்கிய முகங்களா?—
துக்கமான கட்டம் — அங்கே தொடர்ச்சி கெடாத இன்ப லோக யாத்திரையா?
தொல்லை நிறைந்த வேளை — அப்போது எல்லை மீறிய இன்பமா?

பாட்டன் வீட்டிலிருந்து பரதன் வந்தான். தந்தையின் சாவு-தமையனின் ஆரண்ய வாசம்—இவைகளைக் கேள்விப்பட்டான். தான் பட்டம் கட்டிக் கொள்ள மறுத்து அழுதான். அண்ணன் பிரிவும் அரண்மனை நிகழ்ச்சிகளும் அவனை அனலிடைப் புழுவாக்கின. தனது பரிவாரங்களுடன் ராமனை அழைத்து வருவதற்காகப் புறப்படுகிறான். வழியிலே குகனை சந்திக்கிறான்.

பெருந் துக்கத்தில் மூழ்கியிருக்கும் பரதனின் சகோதர பாசத்தைக்கண்டு குகன் வியக்கிறான்.

பரதன் நிலையை ஆச்சாரியார் விளக்குகிறார் பாருங்கள்.

"குகனைச் சந்தித்த பிறகு, பரதனுக்குத் துக்கம் முன்னிருந்ததைவிட, அதிகரித்தது. பரிசுத்த சுபாவத்தை ஜென்ம சம்பத்தாகப் பெற்றவன் பரதன். இப்படியாயிற்றே—என்று அவன் இராமனை நினைந்து பெருமூச்சுவிட்டு உடம்பெல்லாம் வேர்த்துத் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான்."


இப்படி வேதனையின் சிகரமாகிவிட்ட பரதன், குகனைப் பார்த்து—ராமன் என்ன சாப்பிட்டான்? எங்கு உட்கார்ந்தான்? என்றெல்லாம் கேட்டு அழுதானும்-லக்ஷ்மணன் எங்கே தூங்கினன் என்றும் கேட்டானும்.

"ராமனும் ஜனகன் மகளும், கரையில் அங்கே படுத்திருப்பதைப் பார்த்து எனக்குத் தூக்கமும் வருமா என்று கண்ணீர் சொரிந்து, அழுது, இரவு முழுதும் வில்லும் கையுமாக என்னைப் போலவே படுக்காமல் நின்று காத்து வந்தான்"

என்று குகன் சொன்னபோதும் துயரம் தாங்க முடியாமல் பரதன் துடித்துப்போனனும்,

"பரதனும், குகனும் கங்கைக் கரையில் சந்தித்து, துயரத்தைப் பங்கிட்டுக் கொண்டது ஆழ்வார்களும் பக்தர்களும் மிகவும் அனுபவிக்கும் கட்டம்."

என்று ஆச்சாரியாரே எழுதியிருக்கிறார். அவ்வளவு சோகப் ராமாயணப் பாடல்கள் எடுத்தாளப் படுகின்றன. அது போலவே, பரதன், ராமனைத் தேடிச் செல்லும்போது கம்பர் தரும் காட்சியையும் மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஆச்சாரியார் ஏன் தயங்க வேண்டும்? கண்ணீர் மல்கும் நிலையிலே பரிவாரங்களோடு பரதன் போகிறான்.




குகனுடைய முயற்சியால் கங்கையைக் கடக்கப் பெரியதோர் படகு வரிசை ஏற்பாடு செய்யப்படுகிறது; அதில் பரதனும், வசிஷ்டரும், மற்றும் ஆண்களும் பெண்களும் அமர்ந்து ராமனைக்காணும் ஆவலுடன் போகிறார்கள்.

இந்தத் துயரமான கட்டத்தை ஆச்சாரியாரின் அன்புக்குரிய கம்பர் எவ்வளவுஅழகாக வர்ணித்திருக்கிறார் பாருங்கள்.

படகைச் செலுத்தும் துடுப்புகளின் அசைவிலே, கங்கையாற்றின் நீர்த்திவலைகள் மேலெழும்பி, படகில் உள்ள மங்கையரின் ஆடை நனைந்து, அந்த நனைந்த பாகத்தின் வழியாக அவர் தம் மறைவிடத்தை வெளியே தெரியும்படி செய்ததாம் — அந்தக் காட்சியை படகில் உள்ள ஆடவர் ரசித்தார்களாம்—

"காலையில் எழுந்தவர்கள் தலைமயிரைச் சடையாகத் திரித்துக்கொண்டு, காலால் நடந்து போனர்கள்"

இத்தனை சோகச் செய்திகளையும், குகன் பரதனிடம் கூறுகிறான். அரண்மனையிலேயே, அழுது புரண்டு, ஆரண்யத்திலும் வேதனைச் செய்திகள் தாக்கியதால் துடித்துத் துவண்டு, வருந்துகிறனும்பரதன் பெருவெள்ளம் அது! ராமாயணத்தின் நயங்களை வால்மீகி மூலமும், கம்பர் மூலமும் காணுகிற ஆச்சாரியார், இந்த சோகக் கட்டத்திலே, கம்பனின் கவிதா வேகம் எவ்வளவு உச்சக் கட்டத்திற்குப் போயிருக்கிறது என்பதை ஏனே விளக்கவில்லை.

'சக்கரவர்த்தி திருமகன்' கட்டுரையில் பல இடங்களில், கம்ப

அதற்க இதோர் பாடல்—

● 8-ம் பக்கம் பார்க்க

நெய்தல்-துறையின் கதை...

Best copy available

# கலம் கவிழ்த்த 'கனம்'கள்!

[தென்னரசு]

## பிரகாசம்

சாகும் வரையிலே, சிரஞ்சீவி வரம் பெற்றிருக்கும், எனக்குக் கிடைத்திருக்கும் முதல் மந்திரி பதவி என்று ஏமாந்தேன். காங்கிரஸ்மேலிடத்தின் கடைக்கண் வீச்சுக்குஆளானால், அந்தப் பதவிக் கம்பளியை எப்பேர்ப்பட்ட விஷப்பனியும் வெற்றி கொண்டு விடமுடியாது எனக் கருதித்தான் காங்கிரசில் சேர்ந்தேன். அதற்காக என்னை துரோகி எனத் தூற்றுகிறார்கள்- நான் வாழத்தெரிந்தவன். ஆனால் அந்த வாழ்வு ?

மக்களை மந்தைக் கூட்டமென எண்ணுபவர்களுக்கெல்லாம் இதுதான் கதிபோலும்! என்னிடம் என்ன தனிச் சிறப்புக்குணம் இருந்ததோ எனக்கே தெரியவில்லை. ஆந்திர கேசரி என்றார்கள். ஆமாம், உருவத்தில் அப்படித்தானே இருக்கிறேம்—அதற்காகத்தான் அழைக்கிறார்கள் என்று எண்ணினேன். உண்மை அதுமட்டுமல்ல; ஒற்றைக் குரல் ஒன்று எழுப்பினால், அவனை ஒப்பற்ற மாவீரன் என்று கருதிவிடுகிறது இன்றைய சமுதாயம். அந்தத் தப்புக் கணக்கின் விளைவு சூட்டிய பட்டப் பெயர்தான் இந்த 'ஆந்திரகேசரி'

தனிமாநிலம் வேண்டுமென்று குதித்தார்கள் எங்கள் பகுதியினர். டில்லியை தட்டிக் கேட்க ஆளில்லை அந்த நேரத்தில். தெலுங்குச்சீமை தீவிரவாதிகள் என்னைத் தட்டிக் கொடுத்தார்கள். எங்கே ஆந்திர மாநிலம் ?- எனது குரல் மேலோங்கியது. நேரு திகிலடைந்தார். அவரது நெஞ்சத்திலே எனது உருவம் நிழல் சித்திரமாக ஓடத் தொடங்கியது. கட்ஜுவின் கர்ஜனை என் காதுக்கு எட்டாமலில்லை. 'பொட்டியின் மரணத்தை ஒரு பொருட்டாகக் கருதி விடாதீர்கள். தனி தெலுங்கு மாநிலம் பிரிக்க சாவை முத்த மிட்ட கர்மயோகி அவன்; 'ஐயோ 'ஐயோ' என்று அலறிச் செத்தானே அந்த இலட்சியவாதி, அவனுடைய சாவை துச்சமென மதித்தால் அந்த ஆவி உம்மை விட்டு விடாது" என்று வட திசை நோக்கி ஓம்காரக் கூச்சலிட்டேன். வாதத்திற்கு மருத்துவ முண்டு; பிடிவாதத்திற்கு ஏது அது! எந்த டில்லிபீடம் தனிமாநிலக் கிளர்ச்சி கூடாது என்றதோ, அந்த பீடத்தின் முதல்வர் பண்டிதநேருவே ஆந்திர மாநிலத்தின் தனி ஆட்சியைத் துவக்கிவைத்தார், சுய சரிதத்தில் காங்கிரசிற்கு இது ஒரு சரியான அடி—துடைத்து விட முடியாத தோல்விச் சின்னம். ஆனால் காங்கிரசில் சேரப் போகிறேன் என்ற வதந்தி டில்லியின் காதுக்கு எட்டியிராவிட்டால்—அல்லது நேருவின் கவனத்திற்கு என்னுடைய கட்சி மாற்றத்தை மறைமுகமாகத் தெரிவித்திரா விட்டால் ஆந்திர மாநிலம் இவ்வளவு சீக்கிரத்தில் கிடைத்திருக்கு மென்று சொல்வதற்கில்லை. பட்டினியால் மடிந்தவர்களை யெல்லாம், இவரும் ஓர் பொட்டி ராமுலு என்று காண்பித்தால் கூட டில்லி தேவதையின் அருள் கிடைப்பது துர்லபம்தான்.

கட்சி மாறுவதைக் கேவலம் என்கிறார்கள். நம்பிக்கைத் துரோகி என்கிறார்கள். நான் பிரஜா கட்சியிலேயே இருந்திருந்தால் ஆந்திரத்தைப் பிரித்திருக்க முடியுமென்று கருதுகிறீர்கள்! முடியக்கூடிய காரியமல்ல அது. கள்ளர்கள் பல்லை வைத்து கொள்ளை நடத்தினாலும், கள்ளக் கையொப்பமிட்டு கடுஞ்சிறை புகுந்திருந்தாலும், மஞ்சள் கயறு பூட்டி, ஒரு மணாளனுக்கு உரிமைப் பட்டவளை மஞ்சத்திற்கு இழுத்து மானபங்கப் பட்டவர்களானாலும், அவர்கள் காங்கிரசில் சேருகிறேன் என்று ஒருவார்த்தை சொன்னால் போதும்! பொறுப்புள்ள பதவிகள் அவர்கள் வீடு தேடி ஓடி வரும். ஏன் இதையெல்லாம் சொல்லுகிறேன்; கொள்கைப் பற்று மிக்கவர்களின் கூடாரமாக இருந்த காங்கிரஸ், இன்று சொந்த செல்வாக்கு மிக்கவர்களின் காலடியிலே மிதிபடுகிறது என்பதற்காகத்தான்.

நானென்ன அதற்குவிதி விலக்கா? என் விஷயத்திலேகூட காங்கிரஸ் அப்படித்தானே! அப்படியானால் ஆந்திராவில் ஏன் காங்கிரஸ் கவிழ்ந்தது என்று கேட்கிறீர்களா? அதற்கு நான் மட்டுமல்லகாரணம்! என்மனதை அறிந்து நான் செய்த தவறு என் மகனை எனக்கு பிரதம செயலாளராக ஏற்றுக் கொண்டிருந்ததுதான், அவனோ சர்வசூன்யம். இது ஆந்திர மக்களிடேயே அதிர்ப்தியைப் போதித்திருக்கலாம். ஆனால் எனது சகாக்கள் செய்த தவறு?

## சஞ்சீவி ரெட்டி

தமிழ் நாட்டில் திராவிட இயக்கத்தார்தான் அடிக்கடி சொல்லுவார்கள், ஒரு பார்ப்பன குடும்பத்தில் எத்தனை புத்திரர்கள் இருக்கிறார்களோ அத்தனை கட்சி அந்தக் குடும்பத்தில் இருக்கும்; எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் குடும்பம் குதூகலமாக இருக்கும் என்று. அந்த முறை என் விஷயத்தில் இன்னும் முடிவு காணப் பெறவில்லை.

நான் பார்ப்பனரல்லாதவன்தான்; என்றாலும் அந்தக் கொள்கையைப் பொறுத்த அளவிலே சொல்லுகிறேன். எனது அத்தான் நாகிரெட்டி ஆந்திர கம்யூனிஸ்டு கட்சியின் முதுகெலும்பு; ஏன்,இந்தியாவில் கூட அவர் முக்கியமான ஆள் தான். என்ன செய்வது ?

இளமை தான் நீர்க்குமிழி என்று பள்ளிப் பருவத்திலே படித்திருக்கிறேன் — அரசியல் தகராறுகள் வளர்ந்து விட்ட இந்தக் காலத்தில் கட்சிகளின் ஆட்சிகளே நீர்க் குமிழிகளாகி விட்டன. அவலம்! அவலம்!! எனது மனச் சாட்சி குடையத் தான் செய்கிறது. 'அதற்காக' எனது பலவீனங்கள் மட்டும் தானா ஆந்திராவில் காங்கிரசின் வீழ்ச்சிக்கு மூலகாரணங்கள்! முடியாதே! சொந்தக் காரர்கள் பலருக்கு நான் வேலை கொடுத்தேன் அவ்வளவு தான்! இது ஒன்றாலா காங்கிஸ் வீழ்ச்சி அடைந்திருக்கும்! தென்னெட்டியும் கோபால் ரெட்டியும் சற்குணாளர்களா என்ன?

## தென்னெட்டி விசுவநாதன்

சென்னை சட்ட சபையிலே எனக்கு நல்ல பெயர். தென்னெட்டி ஒரு தீர்மானத்தை ஒட்டியோ, வெட்டியோ, பேசுகிறானென்றால், தட்டிக் கேட்கும் தமிழ் எம். எல். ஏ-க்கள் கூட வாய் மூடி மௌனியாக இருந்து விடுவார்கள். திறமைசாலி, நீதிமான் என்று கூடத்தான் நான் பெயர் எடுத்திருந்தேன். என் செய்வது? நீதி நின்றல்லவா கொன்று விட்டது? மக்களை ஏமாற்றிய மாபாதகம் சும்மாவா விடும்.இந்தத் தென்னெட்டிக்கு இருந்த கௌரவம், மரியாதை எல்லாம் தரை மட்டமாகி விட்டது. நான் அப்படியொன்றும் பெரும் தவறுகள் செய்து விடவில்லை, தோழர் பிரகாசத்தைப் போல நெஞ்சிலே நினைத்ததை சட்டமாக்க எண்ணியதில்லை, சஞ்சீவியார் மாதிரி ஜாதிப்பித்துப் பிடித்து திறமையற்றவர்களுக்கெல்லாம் நல்லபதவிகளை வாரிக் கொடுத்து விடவில்லை. எனது நண்பர்கள் பலருக்குவேலை கொடுத்தேன். அவர்கள் விஷயத்திலே கொஞ்சம் 'தளர்ச்சி' காட்டி நடந்து கொண்டேன் - அவ்வளவுதான். கோபால் ரெட்டியைப் போல நான் காங்கிரசுக்கே கொள்ளியா வைத்து விட்டேன். அல்ல! அல்ல!!

## கோபால் ரெட்டி

குமாரசாமி ராஜாவின் மந்திரி சபையில் வடிவழகன் என புகழப்பட்டவன் தான் நான். வயதிலே குறைந்தவனும் நான் தான். அன்றையமந்திரிசபையில் எனக்கு ஒரு தனி செல்வாக்கு இருக்கத்தான் செய்தது. காரணம் எனது இலாகாதானே உலகத்தின் ஜீவநாடி! அப்பேர்ப்பட்ட நிதி இலாகாவின் பொறுப்பாளனாக நான் இருந்த போது போகாத இடமில்லை. நீராடாத புனித நதிகள் கிடையா: என் தலைமையில் நடைபெறாத ஆடல் அரங்கேற்றம் மிகக் குறைவு. கீழ்பாக்கம் இசைவாணியின் கச்சேரி முதல் 'குஸ்தி' விழா வரையில் எனது முன்னிலையின் தான் நடைபெறும். அந்தமுறையை அதிகாரப் பூர்வமான எனது உத்தரவு என்று கருதி தமிழர்கள் நடத்தினார்கள் என்றே யாரும் கருதுவார்கள். அவ்வளவு வாய்ப்பு எனக்கு? அப்படி வாழ்ந்தவனைத்தான் ஆந்திரத்து மக்கள் புறமுதுகிட்டு ஓடச் செய்து விட்டார்கள் பொதுத் தேர்தலில்! சொந்த ஜில்லாகாரன் கொஞ்சம் சொகுசு வாழ்க்கை நடத்தட்டுமென்ற எண்ணம் ஆந்திரர்க்கு எழவேஇல்லை. அன்று நான் ஜெபித்திருந்தால் மாநிலத்தின் நிலைமையே வேறு மாதிரியாகவல்லவா அமைந்திருக்கும்!

இன்று நான், பால்ய விவாகம் செய்து கொண்டு, பர்த்தாவை இழந்த இளம் விதவை, ஆந்திரத்து அரசியலில். இழந்த என் கவுரவத்தைப் பிடிக்க நேர்மையான வேலை பயன்தரக் கூடியதாக அமையவில்லை. எனக்கென்று ஒரு முகாம் தேவைப்பட்டது. அவர்களின் குணம், தரம் எப்படிப் பட்டதென்று பார்த்துச் சேர்க்க எனக்கு அவகாசமில்லை. கிருஷ்ணலீலாக்களை நடத்தியவர்கள், வால்மீகியின் பால்யகால தொழிலை மேற்கொண்டவர்கள், படுகொலைகளை பார்த்திபனின் கலா சேவையாகக் கருதியவர்கள், அத்தனை பேரையும் எனது சகாக்களா

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

## சரியான பதில்!

ஒரு பிரபல ஆங்கில நடிகர் சந்தர்ப்பக் கோளாறால் ஆகாரம் அருந்த ஒரு மூன்றாம்தர ஓட்டலுக்குள் நுழைந்தார். அங்கே ஒரு விந்தையான நிகழ்ச்சியொன்று நடந்தது. அந்த ஓட்டலில் 'சர்வராக' வேலை பார்ப்பவர் அவருடைய நெருங்கிய நண்பர்! ஒரு படத்தில் இருவருமே சேர்ந்து நடித்திருக்கின்றனர்.

"ஸ்காட்! நீ இந்த மட்டரகமான ஓட்டலிலா வேலை பார்க்கிறாய்"?— என்று கத்தினர்; இது அவரை கேலி செய்வது போலிருந்தது.

அதற்கு மற்றவர் நிதானமாக இவ்வாறு பதிலிறுத்தார்:

"ஆமாம்; இங்குதான் வேலை பாக்கிறேன். ஆனால் இந்த மட்டரகமான ஓட்டலில் நான் சாப்பிடமாட்டேன்"

# தலையங்கம்

சென்னை [ 26—11—54 ] வெள்ளி

## "சிவகாமியின் சபதம்"

சிவகாமியின் சபதம் — ஒரு தோடர் கதை — இப்போது அது ஒரு நாடகமாக்கப் பட்டிருக்கிறது. கதை எழுதிய ஆசிரியரின் பெயரைச் சொல்லாமலிருக்கவிரும்பவில்லை. தோழர் 'கல்கி'யாரைப் போல குறுகிய எண்ணம் படைத்தவர்கள் மட்டுமே தான் கதையின் சிறப்பைக் கூறி விட்டு, கதாசிரியரின் பெயரைக் கூறுமலிருந்து விடுவார்கள். சிவகாமியின் சபதத்தின்ஆசிரியர் கல்கிதான்! அவரது அந்த தோடர்கதையிலே சில முக்கியமான சம்பவங்கள் உண்டு. காஞ்சியிலே படையெடுத்த புலிகேசி, காஞ்சியிலேயிருந்து சிவகாமி என்ற கலையரசியையும், இன்னும் பல தமிழ்நாட்டுப் பெண்களையும் அபகரித்து கோண்டு போய்விடுகிறுன் தன் தேசத்திற்கு! அங்கே, அந்தப் பெண்களையெல்லாம் சித்திரவதைக்கு ஆளாக்குகிறுன். அவர்களையெல்லாம் அடித்து வதைக்காமலிருக்கவேண்டுமாஞல், சிவகாமி நடனமாடித்தீரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறுன். அவளும், தன் நாட்டுப் பெண்மணிகளின் வேதனைகளை நீக்குவதற்காக, அரசன் கட்டளைப்படி நடனமாடுகிறுள். தன், கலை வளர்ச்சியைக் காட்டிப் புகழ்பெறவோ, அல்லது தனது அழகான மேனியின் அசைவுகளிலே அரசன் சொக்கிவிடுவான் என்று கருதியோ, நாட்டிய கலாராணி என்ற பட்டம் கிடைக்கும் என ஆவல் கோண்டோ, அவள் அங்கே ஆடவில்லை. தன் நாட்டுப் பெண்களை தொல்லையிலிருந்து மீட்க வேண்டுமென்ற தியாக புத்தியோடுதான் அவள் அங்ஙனம் நடனமாடுகிறுள். இது கல்கியார் தீட்டிய சித்திரம்.

சிவகாமியின் சபதம் பற்றிய விளக்கவுரை இப்போதென்ன தேவை என்ற ஐயப்பாடு பலருக்கு ஏற்படலாம்.

டில்லியிலே தேசீய நாடகவிழா ஒன்று நடைபேறப் போகிறதே; அதற்கு தமிழ் நாட்டின் சார்பில் பிரதேச நாடகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல்தரமான நாடகம் என்று தீர்ப்பளிக்கப்பட்டு, 'சிவகாமியின் சபதம்' செல்ல இருக்கிறது. இந்த தேசீய நாடகவிழா பற்றிய சர்ச்சைகள் அண்மையில் தோன்றி, கலைஞர்களிடத்திலே பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கின்றன என்டது நாடறிந்த சேதியாகும்.

டில்லியிலே தேசீய நாடகவிழா அதற்கு தமிழ் நாட்டிலேயிருந்து ஒரு நாடகம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்காக இங்கே ஒரு நாடக விழா.

இந்த விழாவை நடத்த வேண்டிய பொருப்பை இங்குள்ள நாடகக் கழகத்திடம் தருவதாகக் கூறிவிட்டு, திடீரென்று அந்தப் போருப்பை சென்னை தியேட்டர் சென்ட்டரிடம் ஒப்புவித்துவிட்டார்கள். தியேட்டர் சென்ட்டரின் சென்னைக்கிளையானது நாடகக் கழகத்தைச் சிறிதும் மதியாமல், நாடகக் கலைஞர்கள் யாரையும் கலந்து கொள்ளாமல், கூறப்பட்ட யோசனைகளையும் செவியேற்காமல், மனம் போன போக்கில் யாராவது ஒரு நாடகக் குழுவினரைத் தேர்ந்தெடுத்து டில்லி விழாவுக்கு அனுப்புவது என்று முடிவு செய்தது. "இந்திய சர்க்காரின் ஆதரவில் நடத்தப்படும் இத்தகைய தேசீய விழாக்களில் முறையற்ற செயல்கள் நடப்பதைக் கண்டிக்கும் முறையில்தான்—நாடகக் கழகத்தின் தீர்மானத்தை செய்தோம், விழாக் கமிட்டியில் உள்ள சிலரும் எங்கள் தீர்மானத்தில் கை எழுத்திட்டிருக்கின்றனர்" என்ற அறிக்கையை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் 2-11.54 ஏடுகளில் வேளியிட்டார்கள். "சுதந்திர பாரதத்தில் அரசாங்க ஆதரவுடன் நடைபெறும் முதல் நாடகவிழாவில், அல்லும் பகலும் பாடுபட்டு கலையை வளர்த்த எண்பதாண்டுக் கிழவர் சம்பந்த முதலியாருக்கு இடம் எங்கே? எப். ஜீ. நடேசய்யர், கோபாலரத்னம் ஆகியோர் எங்கே? என்று ஆத்திரமாக அறிக்கை விடுத்துவிட்டு, கலைஞா டி. கே. சண்முகம் அவர்கள் தியேட்டர் சேன்ட்டர் கிளையிலே வகித்த துணைத் தலைவர் பதவியிலிருந்து விலகிவிட்டார்.

திரு. டி. வி. சுந்தரத்தை தலைவராகவும், புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர்—திரு. டி. என். சிவதாணு இருவரையும் செயளாலராகவும் கோண்ட தென்னிந்திய நடிகர் சங்கம் 2-77-87ல் தியேட்டர் சேன்ட்டர் போக்கைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. ராவ்பகதூர் சம்பந்த முதலியாரும் அமைச்சூர் நடிகர் எப்.ஜீ. நடேசய்யரும் நிலையை விளக்கி ஒரு அறிக்கை விடுத்திருக்கிறுர்கள்.

இத்தனை சக்திவாய்ந்த எதிர்ப்புக் குரல்களையும் துச்சமெனத் தள்ளிவிட்டார்கள். பிரதேச நாடகவிழாவை தியேட்டர் சேன்ட்டர் நடத்தி முடித்தேவிட்டது. அந்த விழாவைத் துவக்கிவைத்த நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்களும், "தமிழ் நாட்டில் எதற்கெடுத்தாலும் அபிப்பிராய பேதம்தான்!" என்று கேலிபேசிவிட்டு, உடைந்த தம்பூருவை வைத்துக்கோண்டு, கிழிந்த மத்தளத்தை தட்டிக் கோண்டு, ஒற்றுமைக் கீர்த்தனையைப் பாடி முடித்துவிட்டார். நாடகக் கழகம் தன் முடிவை மாற்றிக்கோள்ள வேண்டுமென்று மந்திரியார் கூறினுரே தவிர டில்லியின் தகாப் போக்கையும், அதையோட்டி சேன்னைக்கிளை நடந்துகோண்ட முறையையும் கண்டிக்கவோ, திருத்திக்கோள்ளவோ அவர் முன்வரவில்லை.

"பாவம்;" அவர் என்ன செய்வார்? பச்சை விபீஷணபுத்தி படைத்தவர் அவர்!

இவ்வளவு பெரிய அமளிக்கும் காமராசர் போன்றவர்கள் வாய் திறக்கவேயில்லை. அவர்தான் என்ன செய்வார்; கட்டியங் கூறும் நிலையிலும், காவடி தூக்கும் நிலையிலும் டில்லி தேவதைக்கு மரியாதை காட்டவேண்டியிருக்கிறதே; இல்லா விட்டால் "பிடிசாபம்" என்று டில்லி முனிவர் சீறி எழுவாரே! தமிழகத்திலே தழைத்தோங்கியிருக்கும் நாடகக் கலையின் பெருமையை டில்லிக்காரர்கள் பார்த்துத் தான் நாம் மதிப்புப் பேறவேண்டும் என்ற நிலையில்லாவிட்டாலும், பெருமைக்குரியதும், பெரும்பாலாஞேர் ஆதரவு பெற்றதுமான...ஒரு நாடக கழகத்தையே அவமதிக்கும் ஆணவம் அனுமதிக்கப்படக் கூடாது என்பதுதான் இன்றைய கலைஞர்களின் ஏகோபித்த குரலாகும்!

இறுதியாக தென்னிந்திய நடிகர் சங்கத்தார் விடுத்துள்ள அறிக்கையிலும், இதை அழகுபட விளக்கியுள்ளார்கள். "ஆங்கிலேயர் அரசாண்ட காலத்தில் அடிமை நாட்டில், அரும்பாடுபட்டுக் காலமெல்லாம் தமிழ் நாடகக்கலை உயர்வுக்காக உழைத்த உத்தமப் பெரியார்களையும், கலைஞர்களையும் புறக்கணித்துவிட்டு, சுதந்திர திருநாட்டில்-சர்க்கார் ஆதரவு, வெளிநாட்டு கலாச்சார உறவு; உபகாரசம்பளம், பரிசு என்ற பெயர்கள் அடிபடும் காலத்தில், கலையின் பெயரால் புல்லுருவிகள் தோன்றி இடம் பிடித்துக்கொள்ள முயற்சிக்கிறுர்கள்,"

இது அறிக்கையிலே ஒரு பகுதி!

நாடகக் கழகத்தினர்—தியேட்டர் சேன்டரை கண்டித்து டில்லி விழாவையும் புறக்கணித்துவிட்டபிறகு, சில புல்லுருவிகள் இடம் பிடித்துக் கோள்வதற்காக சிவகாமியின் சபதம் போன்ற நாடகங்களை நடத்தி, தேர்தல் முடிந்து தேசீய விழாவுக்கும் போக இருக்கின்றனர்.

நாடகக்கழகம் என்பது எல்லா நடிகர்களும்—அதாவது எல்லாக் கட்சி நடிகர்களும்—சேர்ந்துள்ள கழகம், அந்தக் கழகம் கண்டனம் எழுப்பிய பிறகு, கல்கியின் நாடகம், டில்லிக்குச் செல்கிறது! எப்போது இடங் கிடைக்கும், நாம்போய் உட்கார்ந்து கோள்ளலாம் என்று எதிர்பார்த்துக் கிடக்கும் துரோகிகள் எல்லாத் துறையிலுமே உண்டு! அந்தத் துரோகிகள் நடிகர்களிலும் இருக்கிறுர்கள் என்பதற்கு, "சிவகாமியின் சபதம்" ஒரு சான்று!

நடிகர்கள், துரோகிகளாகத்தான் வேஷம் போடுவார்கள் என எண்ணினேம்—இல்லை! இல்லை! வேஷம்போடத் தேவையில்லாத துரோகிகள் இதோ இருக்கிறேம் என்று கூறுகிறுர்கள்! அவர்கள்தான் கிருபா அமைச்சூர் சபாவினர்!

"தமிழ்க்கலைஞர்களை மட்டுமல்ல; இந்த முடிவு, வளர்ந்து நிற்கும் தமிழ்நாடகக் கலையையும், தமிழ்நாட்டின் மானத்தையும் பாதிப்பதாகும்" என்று நடிகர் சங்க அறிக்கை கூறுகிறது! உண்மைதான்!

'சிவகாமியின் சபதம்' அதைத்தான் எடுத்துக் கூறுகிறது!—

கதையிலே வருகிற சிவகாமி, தமிழ்நாட்டுப் பெண்களின் மானத்தைக் காப்பாற்ற நடனமாடினுள் என்று இருக்கிறது.

ஆஞல் இந்த சிவகாமியோ, தமிழ்நாட்டுக் கலையின் மானத்தை அழிப்பதற்காக டில்லியிலே போய் ஆடப்போகிறுள் என்று செய்தி வருகிறது!

கதையின் சிவகாமி, தன் கலாமேதையைக் காட்டிக்கோள்ள எதிரி நாட்டிலே சேன்று ஆடவில்லை! தன் தோழிகளைக் காப்பாற்றவே ஆடினுள்!

இந்த சிவகாமி நாடகமோ, தன் பெருமையை வெளிச்சம் போட்டுக்காட்ட, இடுக்கிலே புகுந்து டில்லி நோக்கி ஓடுகிறது; தோழர்களுக்கு துரோகம் புரிந்துவிட்டு! கதை எழுதிய கல்கி, தூய பாத்திரமாக சிவகாமியை சித்தரித்தார்.

ஆஞல் அதே கல்கி, துரோக பாத்திரங்களை "சிவகாமி சபதம்" என்ற நாடக உருவிலே டில்லிக்கு அனுப்பிவைக்கிறுர். இது இன்றைக்கு புதிய விஷயமல்ல! நடிக நண்பர்களுக்கு வேண்டுமாஞல் புதிய விஷயமாயிருக்கலாம்!

டில்லியின் ஆணவச் செயல்களை அவ்வப்போது சுட்டிக்காட்டிக் கோண்டிருப்பவர்கள் நாம்! அந்த டில்லிக்கு நம்மைக் காட்டிக் கோடுக்கும் அணிவகுப்புக்கு கல்கி போன்றவர்களும், நிதிமந்திரியார் போன்றவர்களும் தளகர்த்தர்கள் என்பதையும் பலமுறை ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறேம்.

10-ம் பக்கம் பார்க்க



# கடலோடி

—கவிஞர் சுரதா—

★

காம்பு விளக்கும், கண்ணுடி நிலவும்
 எரிந்து கொண்டு இருக்கும் நேரம்
 கூவும் கோழியின் கழுத்து போன்ற
 அரிவாள் மணையில், கறிகாய் தன்னே
 அரிந்து கொண்டு இருந்தாள் அஞ்சலே
அஞ்சலே, நிலக்கரி நிறந்தான். ஆயினும்
 உடலின் அமைப்பு; உளியின் உதவியால்
 கட்டிப் பாறையில் வெட்டிய சிலேதான்!
அவளது கணவன் அஞ்சான் என்பவன்,
 புளியங் கொட்டை போன்ற விழிகள்
 உள்ள ஆட்டை ஓட்டிக் கொண்டு
 வந்தான் வீடு. வந்தான் அவளிடம்.
நின்ற விஞக்குறி படுத்தது போல
 இருக்கும் மீசையை இடது கையினுல்
 முறுக்கிக் கொண்டே, மனேவியை நோக்கி;
"நறுக்கிய மாம்பழச் சாறே! கேட்பாய்,
 கன்னியா குமரி சென்று, அங்கே,
 பள்ளக் கடலில் பதுங்கி இருக்கும்
 முத்துக் குளிக்க சித்தங் கொண்டேன்.
 "சித்திரப் படுக்கையே! சென்று வரட்டுமா?"
 என்ருன். 'நல்லது' என்ருள், சென்ருன்.
அஞ்சான் சென்று ஐந்துநாள் ஆனது!
 அஞ்சலே உறங்கியும் ஐந்துநாள் ஆனது!
ஒருநாள் காலே ஒன்பதே கால்மணி.
 பள்ளி செல்லும் பிள்ளேகள் இருவர்;
கன்னியா குமரிக் கடலில் பெரும் புயல்
 வீசும் சேதியைப் பேசிக் கொண்டே
 போவதை அந்தப் பேதை கேட்டு,
 அவருக்கு எதுவும் ஆபத்து நேர்ந்ததோ
 என்று நினேத்தாள். நினேத்த உடனே,
 அடிக்கடி அசையும் இமையில் வந்து
 தொத்திய கண்ணீர் முத்தாய் உதிர்ந்தது.
அழுத துளியும், பொழுது மாக
 இருக்கும் போது, இவளுக் காக,
 கணவன் எழுதிய கடிதம் வந்தது
 ஆவ லோடு அதனேப் பிரித்தாள்.
'அஞ்சலே! எனது ஆசையின் உதவியே!
 உன்னேப் பிரிந்த ஒருமா தமாக
 இரவு உலகம் இனிக்க வில்லே.
 மனது எல்லாம் மந்தம் ஆனது!
கொத்தும் கிளிநான் குமரிக் கரையிலும்,
 கொய்யாப் பழம்நீ கூரை வீட்டிலும்
 இருப்பதால் அல்லவா இந்த தொல்லே.
ஆகையி ஞலே, தோகைப் பறவையே!
 நாளே இரவு நிச்சயம் வருகிறேன்"
 என்று எழுதி இருப்பதை, மங்கையின்
 பார்வை இரண்டும் பார்த்திட, மனது
 வாசித்து முடித்தது. முடிந்ததும் உதடுகள்
 சந்தோ ஷத்தால் சிவந்து போயின!
அடுத்தநாள், உதயம், நடுப்பகல், முடிந்து
 அந்திப் பொழுது வந்து பிறந்தது,
 அத்தான் நினேவு அவளேத் தைத்தது.
உடனே அந்தக் குடும்பத் தலேவி,
 நாயின் நாக்கு போன்ற பாதம்
 நாட்டியம் ஆட, தோட்டம் சென்று
 பூவும் அரும்பும் பறித்துச் சூடி,
 வெள்ளேச் சிரிப்புடன் உள்ளே வந்து,
 புடைவை மாற்றி பொட்டு திருத்தி
 அழகை உடலிலும், அன்பை நெஞ்சிலும்,
 தேக்கிக் கொண்டு, திறந்த விழியும்
 துடித்த நினேப்புமாய்ப் படுத்துக் கிடந்தாள்.
 'அன்னமே' என்று அழைத்த படியே
 ஆளன் வந்தான். அழகி பறந்து,
 'மச்சான்' என்று மார்பில்படிந்தாள்,
 வெடுக்கென் றணேத்தான். எடுத்தான் அவளே உடனே
 உதட்டில் உதடு பதித்து எடுக்கும்
 முத்தம் அதுதரும் சத்தம் வளர்ந்தது!
 இருந்த விளக்கு இவர்களால் அணேந்தது!

# குறளோவியம்

காலே அரும்பியதும் பூந்தாது உண்டு, மடல் விரிந்த தாமரையி னுள்ளே மாலேத்துயில் கொண்டு, மெய்யின்பம் நுகரும் கருவண்டு-

அதுபோல,

காதலனேடு; பூம்பொழிலாம் மதிமுக மங்கயின் பேருருவம் கண்டு; குழலும், யாழும், அமிழ்தும் குழைத்த அவளது மழலேக் கிளவி கேட்டு; தொட்டு; மூவாமருந்தாம் அந்த தேவாமிருத இதழ் களேக் கெளவி உண்டு; அகிலின் புகைக்கு நறுமணம் சேர்க்கும் 'கருப்பு நீர்வீழ்ச்சி'யாம் அவளது கூந்தலே முகர்ந்து; ஐம்புலனேயும் அனுபவிக்கிருன்; இன்பத்துப் பாலுக்கு புதியதொரு இலக்கியம் சமைக்கிருன்! கண் நிறைந்த காரிகையின் கூட்டுறவால் மண் திணிந்த ஞாலத்தில் பிறந்ததின் பயனேயே அறுவடை செய்கிருன்!

அய்யகோ! அந்தப் பேரின்பத் திருவூற்றின் கண்களே 'பிரிவு' என்னும் பொடிமணல், சரிந்து தூர்க்கிறது. நிலம் வீழ்ந்த தாரு மீனய்—கலம் பறிகொடுத்ததொரு வணிகனய், காதலன் ஓலமிடு கிருன்! கோதையைப் பிரிந்த காலமெல்லாம் அவனுக்கு ஒரே வாதைதான்!

ஓசை சிறிதுமின்றி ஊர்ந்து செல்லுமே நச்சரவு; அதைப் போல இரவு நடந்த இன்பக் காட்சிகள் அவன் நினேவிலே ஊர்கின் றன. நஞ்சினும் அதிகமாய்க் கொடுமை செய்கிறதே இந்த நங்கை யின் நினேவு—என்று சஞ்சலப் படுகிருன்.

"வேங்கையைத் தழுவுவேன்; இனிமேல் என் விழி நிறைந்த வளேத் தழுவேன்"—என்று சொல்லத் தோன்றும் அளவுக்கு அவ னது விரகதாபம் மேலிட்டெழுகிறது,

தங்கச்சிலேயின் அங்க அசைவுகள் ஒவ்வொன்றும் மின்னல் கொடிபோல தோன்றி மறைந்து மீண்டும்இன்னல் தருகிறது.

என்னதான் செய்வான், அவன். ஆசைவல்லியைக் கண்ட மாத்திரத்தில் அகண்டு மலர்ந்த விழிகளும் அவளேத் தவிற வேறெ தையும் பாரேன்; என்று தொட்டாற் சுருங்கியைப்போல ஒடுங்கி விட்டதே! — எது செய்வதென்பதறியாது நிலே தடுமாறுகிருன்; ஏதேதோ சொல்லி உள்ளம் புகுந்தவளே திட்டித் தீர்க்கிருன்!

"இன்ப உலகிற்கு வழிகேட்டு வந்த என்னே வாரி அணேத் தாய்;பின் பிரிந்தாய்; இப்போது திசைதவறித் தடுமாறுகிறேனே-" என்று வசை பாடுகிருன்.

"குடுமி கோதி, முத்தம் ஈந்தாய்; இதழ் பிரிந்த என் இதழ்கள் இப்போது கருகி விட்டனவே!"—என்றும் புலம்புகிருன்.

கோமகளின் குளிர்ப்பிடியிலே அடைபட்டுக்கிடந்த அவனது மலேநிகர்த்தமேனி எரிதழல்போல் தகிக்கிறது. "நெருங்கியபோது குளிராய், பின் நீங்கியபோது பெரும் நெருப்பாய் விளங்கும் இது போன்ற புதுமையை நீ எங்கிருந்து பெற்ருய்?" என வியக்கிருன்.

அந்த வியப்பை—விரக வேகத்தை இதோ வள்ளுவர் விளக்கு கிருர்; பாருங்கள்.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்
தீ யாண்டுப் பெற்ருள் இவள் ?

அவன்தான் இப்படி! அவள்மட்டும் என்ன; பிரிவினுல் இன்பமா துய்க்கிருள்? இல்லே; இல்லே.

நெருப்பு தன்னேத் தொட்டால்தான் சுடும்; காதல் நோய் போல் அது தன்னேவிட்டு நீங்கியபோது சுடவல்லதாகுமோ? — என்று சொல்லி கடிந்து கொள்கிருள்.

தொடிற்சுடின் அல்லது காமநோய்போல
விடிற் சுடல் ஆற்றுமோ தீ!

ஜார் மன்னன் உலகத்தின் ஆறிலொரு பங்கை, கால் நூற்றாண்டுகளாக ஆட்சி செலுத்தி வந்தவன். செகண்ட் ஒன்றிற்கு 24—டாலர் வீதத்தில் வருமானமுடைய அந்த கொடுங் கோலன், சாகும் போது ஓட்டாண்டியாகச் செத்தான்! அதிகார போதையிலே தன்னை மறந்து கூத்தாடும் மமதையாளர்களுக்கு வெறி நாயைப்போல சுட்டுத் தள்ளப்பட்ட ஜாரின் முடிவு நல்லதொரு பாடம்!

# சர்வாதிகாரியின் சரித்திரம்

★ மாறன் ★

பாய்ந்து கொல்லும்வேங்கை; பயமல் பார்வையால் கொல்லும் மங்கை — அத்தகைய மங்கை நல்லார்பலர் புடைசூழ; செக்கர்வான்நிகர்த்ததிராட்சை ரசம் அவர்களது பவழவாயிலிருந்து வழிந்து கொட்ட; அதை நக்கிக் குடித்தபடி பீட்டர்ஸ்பர்க் நகரத்திலே கோலாகலத்தோடு கொலு வீற்றிருந்தான் ஜார் மன்னன்.

சீமான்கள் பலர் அவனது சிரம் அசைவிற்காகக் காத்து நின்றனர்! காமன் சதிராடும் கூடமான அந்த அரமண்மனையில் வேசையருக்குப் பஞ்சமில்லை! நாசியில் நெடியேற்றும் மதுவின் துர்நாற்றம்ஒருபக்கம்; அதை அமிழ்த்திட நினைக்கும் பரிமள சுகந்தத்தின் நறுமணம் மற்றொரு பக்கம் — அந்த சுவர்க்கபுரியிலே வாழ்ந்தான், இரண்டாம் நிக்கோலஸ்!

பாவம்! அவனறியான், அந்த குபேரபுரியைச் சுற்றி கொழுந்து விட்டெரியும் புரட்சித் தீயைப்பற்றி! திமிர் பிடித்தவர்களின் உயிர் குடிக்கும் உத்தமனும் லெனினும், பயிர் மேயும் கோவில் பசுவைப் போல பாட்டாளிவர்க்கத்தின் உழைப்பை உறிஞ்சும் உன்மத்தர்களின் எலும் பொடிக்கும் ஸ்டாலினும் ரஷ்ய நாட்டிலே மாபெரும் சமுதாயமாற்றத்திற்கு அடிகோலி வந்தனர். அந்த புரட்சித்தீயின் ஜுவாலையைக் கூட உணர முடியாத தூரத்திலே ஜார் இருந்தான் — ஒய்யாரிகளின் இடையிலே; உல்லாசத்தின் உச்சியிலே!

* * *

1917-ம் ஆண்டு, மார்ச் மாதம், 14-ந் தேதி — திடீரென்று ஜாரின் சேனை துப்பாக்கி தூக்க மறுத்து விட்டது! அவன் பிரயாணம் செய்த ரயிலை ஓட்டுவதற்குக்கூட ஆட்கள் கிடைக்கவில்லை! "மன்னர் மன்னவரே! இத்தனை காலமும் நீர் எம்மை அடிமையாக்கி வைத்திருந்தது போதும் — இனி நாங்களே ஆள்கிரோம்" என்ற அவன் முன்னே முழங்கிற்று ஒரு குழு.

திகில் கொண்ட நிக்கோலசின் முன்பு பட்டம் துறப்பதற்கான சீட்டு ஒன்று நீட்டப்பட்டது. எல்லோரும் எதிர்பார்த்தனர்; சோகப் பெருஞ்சுமையைத் தாங்க மாட்டாமல் ஜார் மன்னன் மயக்கம் போட்டு வீழ்ந்து விடுவானென்று! ஆனால் அந்தக் கொடுமையின் சிகரமோ கொஞ்சமும் அஞ்சினானில்லை. பென்சில் ஒன்றினால் கையெழுத்துப் போட்டான். மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய "ஜூலியஸ் சீசர்" நாடகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்து விட்டான்.

மறுநாள் முதல் துவக்கமாயிற்று அந்த துன்மார்க்கனைப் பழிவாங்கும் படலம்! நீலவானம் போல் பரந்துவிரிந்த மாளிகையிலே, தன்னந்தனியாக மிதந்து வரும் மேகத்தைப் போல மோகனுங்கிகளோடு அலைந்து திரிந்த ஜார் மன்னன் அவனது குடும்பத்தவரோடு, யூரல்மலையின் ஓரத்திலே இரண்டே அறைகள் கொண்ட ஒரு குடிசையிலேகாவல்கைதியாக்கப்பட்டான்!

ராஜபோகம் அனுபவித்த ஜாரின் குடும்பம் அந்த இருட்டறையிலே வாடி வதங்கியது. ஜன்னல் கதவுகளை திறப்பதற்குக்கூட அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஒரு நாள், தென்றலின் மென்மை தன் திரேகத்தைத் தீண்ட இளவரசி அனஸ்தேசியா ஜன்னல் கதவுகளைத் திறந்து தலையை வெளியே நீட்டினாள். அவ்வளவுதான்! காவல்கார சிப்பாய் அவளைப் பார்த்து தன் துப்பாக்கியால் சுட்டுவிட்டான் — முன்பொரு சமயம் பூங்காவனத்திலே புகுந்து மாளிகையின் படிக்கட்டுகளைக் கடந்து, சப்ரகூட மஞ்சத்திலே களைத்திருந்த காதலரை மகிழ்ச்சியில் குளிப்பாட்டிய அந்த மந்தமாருதம், செல்லாக் காசுகளாகிவிட்ட ஜாரின் வாரிசை தீண்டக்கூட மறுத்துவிட்டது!

அந்தக் கொடுங்கோலரின் குடும்பம் நாளொன்றுக்கு ஐந்தே நிமிஷங்கள்தான் வெளியிலே உலாவ அனுமதிக்கப்பட்டது. வீங்கிய தோளோடு சிவிகை தாங்கி உருவோர்; மேலங்கி தரையில் படாமல் அதை ஏந்தி நிற்போர்; பாதகமலங்களில் தூசு ஏறுமலிருக்க பாதையிலே பூ சொறிந்து பாதுகாப்பளிப்போர்; காலை இளம் வெயிலிலே முகம் வாடாமலிருக்க பன்னீர் தெளித்து பக்குவம் செய்வோர்—அந்த பொன்னுன காட்சிகளைநினைத்தபடி ஜார், நிமிஷ நேரத்தை உலாவுவதற்குப் பயன்படுத்திக் கொண்டான்; வியாதியால் நடக்க முடியாமல் சிரமப்பட்ட கைக்குழந்தையை தோளிலே சுமந்தபடி குடிசையைச் சுற்றி வருவான்!

* * *

ஒரு சமயம்; சிப்பாய் ஒருவன் மகாராணியின் பையிலே குலுங்கலோசை கேட்க, பின்னர் அது தங்க நாணயங்களாயிருக்க, அவைகளையும் பிடுங்கிக் கொண்டான் — மகாராணியோ, ஆண்டவனே, அடுக்குமா இந்த அக்ரமம்! இந்தக் கயவர்களைத் தண்டிக்க மாட்டாயா? 'குய்யோ' 'முறையோ' என்று முழக்கமிட்டாள்.

'வரி வரி என்று உமது காவலர்கள் எங்கள் சொத்துகளையெல்லாம் சூறையிட்ட போது அகில ரஷ்ய தேசமும் இப்படித்தான் அம்மா, முறையிட்டது!" என்று பழைய நிகழ்ச்சியொன்றை அவளுக்கு நினைவுபடுத்திச் சென்றான். அந்த சிப்பாய்!

* * *

தேன்வடியும் திராட்சைகளென்ன; மான் இறைச்சியென்ன; காய்ச்சிய பாலென்ன; இவைகளையெல்லாம் அருந்தி மேனியை மெருகேற்றிக் கொண்ட ஜார்பரம்பரைக்கு, சர்க்கரை வழங்கப்படவில்லை; காப்பி மறுக்கப்பட்டது! இதையெல்லாம் அனுபவித்த ஜாரின் நினைவு அலைகள் பின்னோக்கி சுழன்றன.

அன்று 1905-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 22-ம் நாள்; ஞாயிற்றுக் கிழமை!

சாலை நடுவிலே ஒரு மாபெரும் ஊர்வலம் அணிவகுத்துவந்தது. அவர்களது கையிலே போர்க் கருவிகள் இல்லை; அவைகளைத் தூக்கிச் சுமப்பதற்குக்கூட அவர்களுக்கு சக்தி இல்லை. பட்டினிப்பட்டாளம் அவர்கள்;

"எங்களுக்கு உணவு வேண்டும்" என்பதுதான் அவர்களது கோஷம். திடீரென்று அந்த அரைப்பட்டினிகள் மீது பீரங்கிகள் திரும்பின; துப்பாக்கி வேட்டுகள் முழங்கின. பாதிரி கேபன் தலைமையிலே உணவு கேட்டுவந்த மக்களெல்லாம் பிணமாகச் சாய்ந்தனர்.

ரொட்டி கேட்க வந்தவர்களைச் சுட்டுத்தள்ளினன், ஜார் மன்னன்! அதற்குமேல் அவனது நினைவுச் சித்திரம் கலைந்தது.

"காவல்காரன் கொடுத்த உணவிலே உப்பில்லை, அப்பா!" என்ற குழந்தையின் குரல் கேட்டு திரும்பினன். "அவர்கள் மீது தப்பில்லை; என் செல்வமே!" என்று அவனையறியா

தொடர்ச்சி 10-ம் பக்கம்

# இலக்கியச் சந்தையில்!

பாராளும் வேந்தன்முதல், நாயோடும், பூனையோடும் அன்றாட உணவுக்குப் போராடும் பட்டினிக்காரன் வரை இன்ப உலகு செல்ல காதல் வாகனத்திற்காகத்தான் கால் கடுக்கக் காத்து நிற்கின்றனர்!

அந்த ஆனந்த வாரிதியை - துன்பம் துடைத்து, மெய்யின்பம் படைக்கும் ஆருயிர்க் காதலியை, கற்கண்டே என்போர், கனிரசத்தை உவமைக்கு அழைப்போர் அநேகம்! அநேகம்!

கலக விழியைக் காயா மலருக்கு ஒப்பிடுபவர்; மாதுளை மலருக்கும், மாதுவின் இதழுக்கும் வேற்றுமை தெரியாது விழிப்பர்; கள்ளொக்கும் மொழி உதிர்ப்பவளின் நாசிக்கும், எள்ளுப் பூவிற்கும் ஏனோ இந்த ஒற்றுமை என்று வியந்து நிற்பர்— "மிளகாய் பழம் போன்ற அதரங்களின் சொந்தக் காரியே, மனம் இளகாயோ-முத்தம் அருளாயோ" —என்று 'சிந்து' பாடுவர்; இன்னோரன்னவர்கள் இலக்கியத்திலே ஏராளம்! ஏராளம்!

இப்படி, கனிமொழி யென்றும், பூங்கொடி என்றும் மரம் செடிகளின் ஒவ்வொரு உறுப்பினையும் உவமையாக்கி காதலியைப் புகழ்ந்தவர்கள் ஏனோ காயை உவமைக்கு அழைக்கவே இல்லை!

அந்த வழக்கத்தையும் உடைத் தெறிகிறார் வித்துவான் அழகிய சொக்கநாதபிள்ளை - 'காய்'களை அடுக்கி வைத்து, ஒருகாதலன் தனது கனிமொழியாளைத் தேற்றும் வித்தைதைப் பாருங்கள்.

பின்வரும் கண்ணி அவரது 'காதற் பிரபந்தத்'தில் உள்ளது.

வெள்ளரிக் காயா விரும்பு மவ ரைக்காயா
உள்ள மிளகாயா ஒருபேச் சுரைக்காயா

வெள் அரிக்கு ஆயா-வெண்ணிறமுடைய திருமாலுக்கு [அவர் நரசிங்கமாக அவதரித்த தூணை] தாயா? அதாவது, தூண்போல பேசாது நிற்கின்றாயே; நீ தூண் என்றபடி;

விரும்பும் அவரைக் காயா உள்ளம் இளகாயா — உன்னை விரும்புவோரை இயல்பாகக் கோபியாத உன் மனம் (என்பால்) இளகாதா?

ஒரு பேச்சு உரைக்காயா—ஒரு வார்த்தை சொல்ல மாட்டாயா?

# புதையல்


## மு. கருணாநிதி

### துரையின் கதை 15

துரை தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். "தோட்டத் தொழிலாளி என் அப்பா—!" என்று கதையைத்துவங்கியதுமே, மாயாண்டிக் கிழவர் குறுக்கிட்டு, அப்படியானல், இங்கிருந்து குடிபேறிய தமிழர்தான் என்று சொல்லு!" எனக் கேட்டார். 'ஆமாம்', என்று தலையசைத்துக்கொண்டே, துரை தொடர்ந்தான்.

தமிழகத்திலே பிறந்தவர் தான் என் தந்தை. தாயகத்தில் பிழைத்திட வழியில்லாத காரணத்தால் விழியிலேநீர் பெருக்கி, வெளிநாட்டுக் கரையோரங்களிலே மோதிச் சிரழியும் லட்சோபலட்சம் தமிழ்ப் பெருமக்களிலே ஒருவர் தான் அவரும்! என் தந்தையின் தந்தை -என்தாத்தா, தமிழ் நாட்டிலே பெரிய சீமானுக வாழ்ந்தவர். இப்போது அவர் வாழ்ந்த இடத்திலே புல் முளைத்துப் போய்விட்டது. தாத்தவின் தமிழ்நாட்டு வாழ்க்கை மிகமிக ஆடம்பரமானது. அவரது வீடு பெரிய மாளிகையாம்! இப்போது குட்டிச் சுவரைக் காணமுடியாது அங்கே—மாபெரும் கோயிலொன்று கட்டி, அதிலும் மரம் செடி முளைத்துப் போயிருக்கிறது—ஆண்டுக்கொரு பெரும் விழா நடத்துவாராம் தாத்தா! அதிலே ஆயிரம் பிராமணர்களுக்கு சொர்ணதானம் செய்வாராம். இடையிலே மாதம் ஒருமுறை பிராமணர்களுக்கு சமாராதனை! தானதர்மங்கள்! இப்படி, அவர் வீட்டில் விழா இல்லாத நாளே கிடையாது! வேட்டை! வேட்டை!! என் தாத்தா சேகரித்த பணமேட்டை கரைத்துக் கொண்டிருந்தனர், தானம், தருமப் பிராமண போஜனம் என்ற பெயரால்! தாத்தா, தன் மகனுக்கு-அதாவது என் அப்பாவுக்குநடத்தியதிருமணத் திற்குக்கூட பெரும் தொகை கடன் வாங்க வேண்டியிருந்ததாம்-கடன் முற்றியது சொத்து அழிந்தது!

சொர்ணதானங்களும், அன்னதானங்களும் — இறந்த காலத்து நிகழ்ச்சிகளாக தாத்தாவின் மனக்கண் முன் தோன்றி புண்ணை அதிகப்படுத்தின. போஜனத்திற்கு வந்தோர், தானம் பெற கானம் படியோர் யாருமே இப்போது வரவில்லை. அற்ற குளத்தில் பறவைபோல் ஆயினர் சுற்றத்தார், சூழந்திருக்கும் சொந்தக்காரர் அனைவரும்! தாத்தா, மனமுடைந்தார். வீடு, வாசல், மாடு, மனை-அனைத்துமே கடனுக்குக் காட்டப்பட்ட அடமானப் பொருளாக ஆகிவிட்ட பிறகு — அவையனைத்தும் கடன்காரர்களைச் சேரவேண்டிய நிலைமை ஏற்பட்ட பிறகு, இனி கௌரவத்தோடு எப்படி வீதியில் உலவ முடியும் என்ற வேதனை அவரைக்குடைய ஆரம்பித்து விட்டது! ஒரு காலத்தில் 'ஓகோ!' என்று வாழ்ந்தோம் — இன்று தெருவிலே நிற்கிறோம் — சீந்துவாரற்றுப் போய் விட்டோம்! — என்ற நிலை பிறந்து விட்ட உச்சக் கட்டத்தில் தாத்தா, தன் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள, அப்பாவையும், அம்மாவையும் தனியே விட்டு விட்டு, தற்கொலை செய்து கொண்டார். அப்பாவும் அம்மாவும் வாலிப வயதினர். தாத்தாவின் முடிவு அவர்களைத் தத்தளிக்கச் செய்தது. அம்மாவின் குடும்பம் மிக மிக ஏழ்மைக் குடும்பம் — அதுவும் நாதியற்ற குடும்பம். தாத்தா, தன் மகனுக்கு ஒரு ஏழைப் பெண்ணையே திருமணம் செய்ய வேண்டுமென்று அந்தப் பெண்ணை திருமணம் செய்து வைத்தாராம், பல பிரமுகர்களின்எதிர்ப்புக் கிடையே! பாட்டி, அப்பா, அம்மா, மூவரும் தமிழ் நாட்டில் வாழ வழியின்றித் தவித்தார்களாம்.



சீமான் வீட்டு செல்லப்பிள்ளை காரணத்தால், அப்பாவுக்கு எந்தத் தொழிலும் செய்ய இயலவில்லை. பழக்கமுமில்லை விவசாயத் தொழிலில் ஈடுபடலாம் என்று முடிவுகட்டி அந்த ஊர் அய்யர் ஒருவரிடம் அப்பா சென்றாராம். அந்த அய்யர், என் தாத்தாவிடம் பல ஏக்கரா நிலங்களை புரோகிதத் தொழிலுக்காக சன்மானமாகப் பெற்றவர். அப்பா, அவரிடம் சென்று நிலத்தை சாகுபடி செய்யும் பொறுப்பை தனக்குத் தருமாறு கேட்டாராம். அய்யரோ, மறுத்து விட்டார். தாத்தா, தானமளித்த நிலம்—அதை உழுது பயிரிட்டு தானியத்தை அளக்கும் குத்தகைக்காரன் வேலையாவது கொடுங்கள் என்று கெஞ்சியிருக்கிறார் அப்பா. அந்த வஞ்சகனே "உழவுமாடு வாங்க உன்னிடமேது பணம்?" என்று உரத்த குரலில் கேட்டு விட்டு, கதவைத் தாளிட்டுக் கொண்டானும். அப்பா, பாட்டியிடம் விஷயத்தைச் சொல்லி அழுதிருக்கிறார். பாட்டிக்கு என்ன தெரியும்; அவர்களும் புலம்பியிருப்பார்கள்—தமிழ் நாட்டில் வாழ முடியாது என்ற முடிவு ஏற்பட்டு விட்டது! கையில் ஓடேந்தி, 'காசுதாரீர் அய்யா!" என்று வீதியிலேகிளம்புவதற்கு முன்பு ஏதாவது ஒரு வழி தேட வேண்டுமென்று யோசித்தார்கள்! "திருப்பதி வெங்கடாஜல பதியே! வழி காட்டாயோ, இந்த திக்கற்றவருக்கு!" என்று பாட்டி அழுதார்கள் — வழிகாட்டவில்லை வெங்கடேசர் — தாத்தா செய்து போட்ட வைரமாலை தான் ஒளி காட்டியது!

"தில்லை நடராசா! தொல்லை தீராயோ!" என அழுதார்கள் பாட்டியம்மாள்! தங்க வீடு சிரித்தது! தணல் அணைக்க தயாபரர் தயவு புரியவில்லை! இந்தக் கொடுமையான நேரத்திலேதான் இலங்கைத்தீவு, தன்னை வளப்படுத்திக் கொள்ள உழைப்பாளர்களைக் கூவி அழைத்தது! இலங்கையின் காடுமேடுகளை அழித்து, கவினுறு சோலையாக்க, கப்பலிலேஏறினர்கள் ஆயிரமாயிரம்

Filmed as bound

ஏழைக் குடும்பமும் ந்து கொண்டது! அப்பா, மா, பாட்டி, மூவரும் ங்கையிலே தோட்ட ல பார்க்கத் தொடங்கி டார்கள். "குளிர் கோட்டம் ளயிலே எங்கள் குடும்பம் லக்குப் புறப்படும் — நானும் ரவியுமாவது வாலிப வயதி என் அன்னைக்கோ கிழப் வம். தளர்ந்த உடல். தசை ல்லாம் நடுங்கும், நடக்க முடி ல் நடப்பார்கள். தேஜஸ் றயாது என் தந்தை பாது த அந்த தேகம் தேயிலை த்து தேய்ந்தே விட்டது!" ப்பதாக, என் அப்பா, பாட் யைப் பற்றி தன் டைரியிலே ழுதிவைத்திருந்தார்," று கூறி விட்டு துரை ருமூச்சு விட்டான், அவன் களிலே கலக்கம் படர்ந்தது மாயாண்டிக் கிழவரும் சவற்ற நிலையிலே கதையை லோடு கேட்டுக் கொண் ந்தார். கதை கூறும் போது றசையாகப் பெண்களின் த்தில் ஏற்படும் பிரதிபலிப்பு பரிமளாவின் முகத்திலும் னவின்றி மறைந்து ண்டிருந்தன.

டைரியிலே, அப்பா, இன் ஒன்று, எழுதியிருக்கிறார் அதையும் படித்து விட்டு, பாட்டியின் திருமுகத்தை ஒரு முறை நினைத்தால், போதுகூட என் இருதயம் வடித்து விடும் போலிருக் து! — பாட்டி, பழமாகப் ய்த்தான் செத்தார்கள் — ல் அவர்கள் மண்ணோடு ப்பதற்கு முன், உலகத்தில் திக்க வேண்டிய துன்பங் எல்லாவற்றையும் கை தொகையாகச் த்து சந்தித்து விட்டார்கள்.

என் அருமைத் தாயார் ங்கை வந்த பிறகுகூட சேர்ந் போல நான்கு நாட்கள் டினிகிடந்தார்கள் — எனக்கு ன் பிறந்தான் — அந்தப் சவச்செலவுக் குப்பணமில்லை. ற்காக, என் தாயார், தன் வுக்கு ஏற்பட்ட தானியத்தை ருக்கும் தெரியாமல் ரகசியமாக று, ஒரு நாள் இரண்டு நாள் சவச் செலவை செய்திருக் ர்கள். எனக்கு மகன் பிறந் ன், என் தாய் பட்டினி கிடக் ர்கள். அய்யோ, நான் அவர் க்கு மகனாகப் பிறந்தேனே— வி!"

என்று என் தந்தை எழுதி க்கிறார் டைரியிலே! அதை போது நினைத்தாலும் என் ம் துடிக்கிறது-என் தந்தை மனம் என்ன பாடுபட்டி க்குமோ-யாருக்குத் தெரியும்! யா பெரியவரே! நீங்களும் கள் நீண்ட நாள் அனுப த்தில் எத்தனையோ மனிதர் சந்தித்திருப்பீர்கள்-ஆனால் ரும், என்னைப் போல, ளமையிலே இவ்வளவு தனைக்கணைகளுக்கு ஆளாகி க்கவே முடியாது-இளமை.

தாயை இழந்தேன்—பழுத்த இலை என் பாட்டி, அவர்களது நிழலிலே வளர்ந்தேன்-நான் மட்டுமல்ல பெரியவரே! என் தங்கையும் அந்த நிழலிலே என்னோடு வளரவேண்டிய வளாகி விட்டாள்!

என் பாட்டி, தன் ஆருயிர்க் கணவர் தற்கொலை செய்து கொண்ட செதியையும் தாங்கிக் கொண்டார்கள், மகனும் மருமகளும் தன் நிழலிலே வாழவேண்டும் என் பதற்காக! மஞ்சம், மாளிகை என்றெல்லாம் மந்தகாசமாய் வாழ்ந்த அவர்கள்—பஞ்சம், பட்டினி பிடித்தாட்டிய நேரத் திலும் சமாளித்துக் கொண் டார்கள்; மகனும் மருமகளும் குடும்ப விளக்கை பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்பதற் காக! பிறகு, மகனையும் மரு மகளையும் பரிதாபகரமாகப்பிரிந் தார்கள்—அப்போதும் சோகத் தை சுமந்துகொண்டு தள்ளாடி


சிறு அலகுகளைப் பிளந்து கொண்டு ஆகாயத்தை நோக்கி அமர்ந்திருக்கும் போது, தாய்ப் பறவையின் பிணம் அவை களின் மீது விழுந்தால் எப்படி யிருக்கும்?

அதே நிலைதான் எங்களுக் கும்! முல்லை மொட்டுக்கள் நாங்கள் செடியின் வேரிலே வெண்ணீர் ஊற்றப்பட்டு விட் டது! —

நாங்கள் விளையாடித் திரிந்த திரிகோணமலையின் தெருக்கள், எங்களுக்கு பயங்கரமான குகை போலக் காட்சி தந்தன. -பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்தேன் — பிற்பகல் உணவுக்காகக் குதித்தோடி வந்தேன். வழக்கமாக வீட்டு வாசலில் நின்று என்னை கை தட்டி வரவேற்கும் அன்புத் தங்கையைக் காணவில்லை. அடுத்த வீட்டுக்காரர்கள் என்னை அழைத்து அணைத்துக் கொண்டார்கள். எனக்கு ஒன்

திக் கொலை செய்தது என் தந் தையாம்!—தாய் பிணமாகி விட்டார்கள்!— தந்தை கைதி யாகி விட்டார் — காலையிலே என்னைப் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்ததால், நான் திரும்பிவரும் போது, 'மகனே!" என்று அழைக்கா மல் மௌனமாகி விட்டார் கள். அவர்களை ஊமையாக் கியது, என் தந்தை. "வள்ளீ! வள்ளீ!" என்று வாயிலே தேனொழுக அழைப்பார் அப்பா, அம்மாவை! அந்த அப்பா, தன் ஆசைக்குரிய ஒரு ஜீவனை அரை நொடியிலே அழித்து விட்டார் என்ற கொடுமை யான செய்திக்கு நான் அந்தப் பசலைப்பருவத்திலே இறையா னேன்.

துடித்தேன் - துவண்டேன்- அழுதேன்-புரண்டேன்-அம்மா வின் பிணத்தையும் ஆஸ்பத் திரியில் அதைக் கூறுபோட்டு சோதனை செய்து, துண்டம் துண்டமாக ஒட்டித் தைத்து எங்களிடம் ஒப்புவித்தார்கள். பாட்டியின் நிலையைச் சொல்ல வும் வேண்டுமோ? அவர்கள் அந்தத் தள்ளாத காலத்திலே, மருமகளின் கூறுபோட்ட பிணத்தை அள்ளிக்கொண்டு சுடுகாட்டுக்குப் போனார்கள். மகனோ சிறையிலே அடை பட்டுக் கிடக்கிறான். அம்மா, அப்பா, என்று அழுது கொண்டே துடிக்கும் நாங்கள் இருவர். பாட்டி இந்தக் காட்சி களையெல்லாம் கண்டாள். சுருக்கம் விழுந்த அவளது கன்னங்களிலே, கண்ணீர்த் துளிகள் பெருகி, வாய்க்கால் கள் போல ஓடின.



நடந்தார்கள்; பேரப் பிஞ்சு களான என்னையும் என் தங்கத்தையும்குலக்கனிகளாக்க வேண்டுமென்ற ஆசையுடன்! பெருந்தகையீர்! என்னைப் போல கஷ்டப்பட்டவர்கள் யாருமிருக்க முடியாது' தந்தை யின் பிரிவு எதிர்பாராத பயங் கரம்! தாயின் முடிவோ சொல் லத்தரமன்று!

சாகவேண்டிய வயது கிடை யாது என் தாய்க்கு! என் பாட்டி அதைத்தான் சொல் லிச் சொல்லி அழுவார்கள்;

"அடப் பொல்லாத யமனே! என்னை விட்டு விட்டு, அவ ளைக் கொண்டு போய் விட் டாயே!" என்று! அப்போது நானும் என் தங்கையும் பாட் டியைக் கட்டிக் கொண்டு அழுவோம். எனக்குப் பத்து வயது இருக்கும். தங்கைக்கு ஐந்து வயது இருக்கும். அந்த வயதில் எங்களைக் கண்போலக் காத்த தாய் தந்தை இருவரை யும் ஏககாலத்தில் பிரிந்து விட்டு, வாழ்வதென்றால் சாமான்யமா?

காட்டில் வாழ் குஞ்சுகள், இரை தேடி வரப்போகிறது

றும் புரிய வில்லை. வீட்டுக்குள் நுழைய முடியாமல், அடுத்த வீட்டுக்காரர்கள் தடுப் பானேன் — அதுவும் அன் போடும், பரிவோடும் தடுப் பானேன் — அப்படித் தடுப் போரின் முகமெல்லாம் வெளுத் தும் போயிருப்பானேன் — திகைத்தேன், "அப்பா கண்ணு! அழக்கூடாது — அம்மா செத்து போயிட்டுது" என்று அவர்கள் ஆறுதல் சொன்னார் கள்.

என் அம்மா செத்து விட் டார்கள் — இல்லை — இல்லை! —என் தாய் கொலை செய்யப் பட்டு விட்டார்கள் — ஆமாம் — கயிற்றுக் கட்டிலிலே ரத்த வெள்ளத்திலே என் தாய் மிதந்தார்கள் — அவர்களது விலாவிலும், முதுகிலும் கத்திக் குத்துக்கள்! தாயைக் கொலை செய்து விட்டார்கள்: கொலை செய்தது யார் தெரியுமா? — பெரியவரே! பேசவே நடுங்கு கிறது—நீங்களோ என் கதையை பொறுமையாகவும் நிதானமாகவும் கேட்கிறீர் கள்-என் உள்ளம் கொதிக்கும் கொப்பரையாகி யிருக்கிறது,

அடப்பாவி, கொலைகாரன் அந்தக் குமாரவடிவு என்று திரிகோணமலையே திட்டித் தீர்த்தது. என் அப்பாவின் பெயர்தான் குமாரவடிவு — குமார வடிவு, வள்ளியம் மாளைக் கொன்றுவிட்டார்— ஆம், என் தந்தை, என் தாயைக் கொலை செய்து விட்டார்.

பத்துவயது சிறுவனாயிற்றே நீ; இவ்வளவு விபரமும் அப் போது உனக்கு எப்படித் தெரியும் என்று எண்ணுகிறீர் களா? எனக்குப் பத்து வயதுதான் என்றாலும். அப்பா எழுதிவைத்த டைரியும், இந் தப் பயங்கர நிகழ்ச்சிக்குப் பிறகு, உயிரோடு சில வருடங் கள் இருந்த பாட்டி சொன்ன உண்மைகளும்தான் நான் சொல்லும் என் கதைக்கு ஆதாரங்கள் — பரிமளாவுக்கு கதையைக் கேட்கும் போதே கண்ணீர் பெருகுகிறது—கதை யிலே வரும் இந்தக் குழந்தைப் பாத்திரம் எவ்வளவு குமுறி யிருக்கும் என்று நீங்களே நினைத்துப்பாருங்கள்.

தாய் கொலை — தந்தை கைது — தங்கை தவிப்பு —

★ 10-ம் பக்கம் பார்க்க

# தொல்லை நிறைந்த வேளை!

○ 1-ம் பக்க தொடர்ச்சி

அயோத்யா காண்டம்—குகப் படலம் 56வது செய்யுள்;—

"இயல்வுறு செலவினாவா யிருக்கையு மெயினோர் தூண்டத்
துயல்வன் துடுப்பு வீசுந் துவலை கண் மகளிர் மென்றூ
சுயல்வரு பரவை யல்கு லொளி புறத்தளிப்ப வுள்ளத்
தயற்வுறு மதுகை மாந்தர்க் களா உயிர்ப் பளித்த தம்மா!"

அரண்மனைப் பெண்களும், ராணிகளும் செல்கிறார்கள் படகில்! கட்டமோ சோகக் கட்டம்! கம்பரின் கண்களோ, எந்தக் காட்சியையே படம் பிடிக்கின்றன!

நீர்த்துளி பட்டு நனைந்து வெளியே ஒளிகாட்டும் பாகங்களை மறைத்துக் கொள்ள எண்ணாத மாதர்கள்!

அப்படி மறைக்கப் படாத வைகளை பார்த்து ஆனந்தப் படும் பரிவாரங்கள்!

அயோத்தியின் நாகரிகமே நாகரிகம்! —கம்பன் பக்தியை பிரதானமாகவைத்து ராமாயணம் எழுதினான் என்று கூறியிருக்கிற ஆச்சாரியாரின் மேதா விலாசத்துக்கு ஈடு இணை இந்த உலகத்தில் ஏது?

சரி; சேனை முழுதும் நதியைத் தாண்டியாயிற்று — அக்கரையில் உள்ள பரத்துவாஜ ஆசிரமத்துக்கு பரதன் சென்றான். பரத்துவாஜ முனிவர் "பரதன், ஒருவேளை ராமன்மீது படையெடுத்து வந்துவிட்டானோ" என்ற சந்தேகப் பட்ட குகனைப் போலவே சந்தேகப் பட்டாராம் பரதன்மீது! குகன், சாதாரண மானிடன். அதனால் பரதன் மீது சந்தேகப் பட்டான். பரத்துவாஜர், முனிவர்—அவர் சந்தேகப் படலாமா? என்று யாராவது கேட்டு விடுவார்களே எனப் பயந்த ஆச்சாரியார், அதற்கும் சமாதானம் எழுதியிருக்கிறார். அது, இதோ!

"நான் சக்கரவர்த்தித் திருமகன் எழுதுவது வால்மீகி ராமாயணத்தின்படி! குகன் எப்படி பரதனுடைய பரிவாரத்தைக் கண்டு சந்தேகித்தானோ, அப்படியே பரதுவாஜ ரிஷியும் சந்தேகித்தார் என்று. வால்மீகி படியாயிருக்கிறார். துளசி ராமாயணத்தில் இப்படி இல்லை. துளசி ராமாயணம் முற்றிலும் பக்திமயம். ரிஷிகளுக்குத் தெரியாத ஒரு விஷயமில்லை. ஆனபடியால் துளசி ராமாயணத்தில் பரதனைப் பற்றிப் பரத்துவாஜருக்கு, சந்தேகம் எப்படி இருக்க முடியும்? ஆனால் கம்பர் பாடியிருப்பது, வால்மீகியைப் பற்றித்தான்

ஆச்சாரியாருக்கு எவ்வளவு பெரிய குழப்பம் ஏற்பட்டு, மக்களையும் குழப்புகிறார் என்று கவனியுங்கள்.

வால்மீகி, ராமனை—ஒரு வீர புருஷனாக சித்தரிக்கிறார் — துளசிதாஸ் பக்திக் கண்ணோடு ராமனைக் காணுகிறார் — கம்பர் கடவுளாகவே பார்க்கிறார்—என்றெல்லாம் கூறுகிற ஆச்சாரியார், இப்படி எல்லோரும் ஆளுக்கு ஒருவிதமாகக் காணுகிற கம்ப ராமனைத் தூக்கிக் கொண்டு காலக்ஷேபம் நடத்துவானேன்?

பரத்துவாஜருக்கு பரதனைப் பற்றி அறியும் ஞானமில்லை என்கிறார் வால்மீகி! ஞான மிருந்தது என்கிறார் துளசிதாஸ்! ரிஷிக்கு ஞானமில்லாமல் இருக்குமா? என்று கேட்கிறார் ஆச்சாரியார். ஆனாலும் அவர் எழுதுவது வால்மீகி ராமாயணந்தானும்!

இதுவரை 36 கட்டுரைகள் எழுதியிருக்கிறார் ராமாயணத்தைப் பற்றி. 36 கட்டுரைகளிலும் 36 முரண்பாடுகள் காணப்படுகின்றன. முதல் இதழில், ராமன் கடவுள் அவதாரமல்ல என்று எழுதினார்—அதன் பின்னர் எழுதிய கட்டுரைகளில் ராமன் விஷ்ணு அவதாரம் என்று மொழிந்தார்—

இந்த 36 வது கட்டுரையில் என்ன கூறுகிறார் தெரியுமா?

"ராமன், சாக்ஷாத் பகவானுடைய திரு அவதாரமாயினும் வால்மீகி ராமாயணத்தில் ஒரு வீர புருஷனாகவே சித்தரிக்கப் படுகிறான்."

எத்தனை முரண்பாடுகளும், மழுப்பல் வேலைகளும் பாருங்கள்!

உண்மையை மறைப்பதற்கு யார் முயன்றாலும் அவர்கள் எவ்வளவு பெரிய திறமைசாலிகளாயிருந்தாலும் — இப்படித்தான் சேற்றில் மாட்டிக் கொண்டு திண்டாடுவார்கள்! அதற்கு ஆச்சாரியார் ஒரு நல்ல உதாரணம் — பின்னர், பரத்துவாஜர் — பரதனுக்கும் அவன் பரி வாரங்களுக்கும் ஆஸ்ரமத்தில் ஒரு விருந்து நடத்தினார்—

ஆஸ்ரமத்திலே நடைபெறும் விருந்து எப்படியிருக்குமென்று கருதுகிறீர்கள்? கனி வகைகள், காய்கறிகள், ஆவின் பால், இது போல இருக்கும் என்றுஎண்ணுவீர்கள்; அதுவும், பரதன் கோஷ்டியார் சோக ரசத்தில் மூழ்கி, அழுத கண்ணோடு இருக்கிறார்கள். அந்தக் கட்டத்தில், விருந்து இன்னும் சாதாரணமாகத் தானே யிருக்கும்- போடுகிறவன் போட்டாலும், சாப்பிடுகிறவனுக்கு வயிறோ, மனமோ இடங் கொடுக்காத நேரமல்லவா அது! — ஆனால், பரத்துவாஜர் அளித்த விருந்தைப் பாருங்கள்.

யமன், வருணன், அக்கினி, குபேரன் ஆகிய தேவர்களை வரவழைத்து, (ஆரியபவன் ஹோட்டலிலே, டின்னர் பார்ட்டிக்கு ஆர்டர் கொடுப்பது போல) பரத்துவாஜர் விருந்துக்கு உத்திரவு கொடுத்தார். அவர்களும் கட்டளையை கச்சிதமாக நிறைவேற்றினார்கள். விருந்தைப் பற்றி ஆச்சாரியாரே எழுதுகிறார், படியுங்கள் - ஆனால் படிக்கும் போது, பரதன் கூட்டத்தார் எவ்வளவு சோகமான கட்டத்தில் இருக்கிறார்கள் என்ற கதையை மறந்து விடாதீர்கள்.

"எல்லோருக்கும் தகுந்த விடுதிகள், ஸ்னானாதி விஷயங்களுக்குச்சௌகரியங்கள். சந்தனம், புஷ்பம், அன்ன பானாதிகள், பணியாரவகைகள். அப்சரஸ்களின் நிருத்தியம், கந்தர்வ சங்கீதம், எல்லாம் நினைக்க முடியாத தெய்வீக ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டு எல்லோரும் மெய் மறந்து அனுபவித்தார்கள். பரதனுடைய சேனையிலுள்ள படை வீரர்கள், மகிழ்ச்சி மயக்கத்தில் 'இனி நாம் தண்டகாரண்யம் போக வேண்டியதில்லை- அயோத்திக்கும் திரும்பப் போவதில்லை. இங்கேயே இருந்து விடுவோம் என்று எண்ணினார்கள்,

எல்லையில்லாத சம்பத்தை அடைந்த ஒரு மகாராஜா. மற்றொரு மகாராஜாவுக்கும், அவன் பரிவாரத்துக்கும் தன் ராஜதானியில் நடத்தும் ஒரு பெரிய விருந்தைப் போல் பரத்துவாஜர் வசித்த ஆசிரம வனத்தில் விடுதிகள், வாகனங்கள், பணியாட்கள் உட்பட, எல்லாம் ஒரு கணத்தில் உண்டாக்கி, அனைவரும் எல்லை மீறி அனுபவித்து, மெய்மறந்து தூங்கி விட்டார்கள்."

எப்படி ஆஸ்ரமத்து விருந்து! அதுவும் துக்ககரமான நேரத்திலே நடை பெற்ற விருந்து!

ஆச்சாரியார் எழுதியதைத் தான் அப்படியே காட்டியிருக்கிறேன் — விருந்து எவ்வளவு சுவையாக இருக்கிறது பார்த்தீர்களா? — அதுவும் முற்றும் துறந்த முனிவர்கள் ஆஸ்ரமத்தில்! அமெரிக்க அரசாங்கம் கூட நடத்த முடியாத அவ்வளவு பெரிய விருந்து! — கொத்தலவாலை கொலுமண்டபத்தில் கூட நடத்த முடியாத அவ்வளவு அற்புதமான நடனம்! ஆகா! ஆகா! ஆகா! — ஆச்சாரியார் எழுதியுள்ளதை மீண்டும் படியுங்கள்—

(1) அப்சரஸ்கள்—(தேவ மாதர்களான ரம்பை ஊர்வசி முதலியோர்)

(2) அன்னபானாதிகள்—

(3) எல்லை மீறி அனுபவித்து—

(4) மெய்மறந்து—

இந்த வார்த்தைகளை யெல்லாம் இணைத்துப் பாருங்கள் — முனிவர் நடத்திய விருந்தை எண்ணும் போது! "அய்யோ! நாமும் பரதனாக இல்லையே!" என்கிற எண்ணம் சில வாலிபர்களுக்கு வருமா? வராதா?—ஆச்சாரியார், இந்த இடத்தில் வால்மீகி, கம்பர் எழுதிய வர்ணனைகள் முழுதும் எழுத வில்லை — அவைகளையும் எழுதினால், ஒவ்வொரு எழுத்தும் போதையாக இருக்கும்—விருந்து முடிந்தது,

வயிற்றுக்கு உணவு பெற்ற அயோத்தி வீரர்களும் — அண்ணனைத் தேட வந்த அருமைத் தம்பி பரதனும் உணர்ச்சிக்கு உணவுபெற்ற விதத்தை கம்பர் விளக்குகிறார் பாருங்கள்.

# எல்லை மீறிய இன்பம்!

அஞ்சடுத்த வமளி யலத்தகப்
பஞ்சடுத்த பரிபுரந் பல்லவ
நஞ்சடுத்த நயனியர் நவ்வியிற்
றுஞ்ச வந்தனை மைந்தருந்
துஞ்சினார்


அதாவது ஐந்துவகை மென்மையான பொருள்களால் ஆகிய பஞ்சு மெத்தையிலே, செம்பஞ்சு ஊட்டப்பெற்ற. சிலம்பு அணிந்த தளிர்போன்ற பாதங்களையும், விஷம் போன்ற விழிகளையுமுடைய தேவமகளிர், பெண்மான்களைப் போல அருகில் படுத்து உறங்க, அத்தனை மைந்தரும் உறங்கினார்களாம்.

இடமோ ஆரண்யம்; நேரமோ அர்த்தசாமம்; காமக் காட்சிகளை வர்ணிப்பதோ கம்பன்; ஆச்சாரியார் கூட நிலைதவறிப் போயிருப்பார்.

தான் பெற்ற இன்பத்தை கல்கி வாசகர்களும் பெறக்கூடாது என்கிற கெட்ட நினைப்புத் தானோ என்னவோ, அந்த வேதியப் பெருங் கிழவர், கம்பனது வர்ணனை விநோதங்களுக்கு விளக்கம் தராமல் ஒதுக்கி—விட்டார்

அப்படிப் பட்ட விருந்தின் மேன்மைபற்றி — ஆச்சாரியார் எழுதுகிறார் - இனிக்கிறது பக்தர்களுக்கு! ஆஸ்ரமத்து யோக்யதை

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்.




## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தினம் தினம் எத்தனையோ ருசிகரமான சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவைகளில் சில சிரிக்க வைக்கும்; சில சிந்திக்க வைக்கும்; சில அழ வைக்கும்; சில அருமையான பாடங்களையும் புகட்டும்.

அப்படிப்பட்ட சம்பவம் ஒன்று இவ்வாரம் வருகிறது. சென்னைத் தம்பி கண்ணன் எழுதியுள்ள அச் சம்பவம் உங்களை சிந்திக்க வைக்கும். படியுங்கள்:

★ ★

## அடித்தேன்; அணைத்தான்

அன்று ஞாயிற்றுக்கிழமை.

வீட்டில் விளையாடி சலித்துப் போய்விட்டது எனக்கு. எத்தனை நேரம்தான் ஆடும் குதிரையும், ஓடும் ரயிலும் மகிழ்ச்சியைத் தரும்? நான் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டேன். தனியாக அல்ல; என்னைப் போன்றபணக்காரத் தம்பிகளுடன்தான் எப்போதும்இரண்டு நண்பர்கள் இருப்பார்களே! அதைப் போல நண்பன் மோகனும் என்னுடன்வந்தான்.

இருவரும் ஊர்க் கோடியிலிருந்த ஆற்றங்கரைக்கு வந்தோம். ஆற்றிலே நீர் நிரம்ப ஓடிக் கொண்டிருந்தது. ஓடும் நீரிலே நீந்தி விளையாடிக் கொண்டிருந்தார்கள், பக்கத்தில் குடியிருந்த சேரிச் சிறுவர்கள்

அதே கணம் எனக்கும் நீரில் நீந்த ஆசை உண்டாகிவிட்டது. நண்பனைக் கேட்டேன். அவனும் தலையை ஆட்டினான். நான் தயாரானேன்.

உடனே அந்தச் சிறுவர்களைப் பார்த்துச் சீறினேன். "எல்லாரும் கரையேறுங்கடா! நான் குளிக்கப்போறேன்" என்று கத்தினேன். என்னுடைய திடீர்க் குரலைக் கேட்டதும் அந்தத் தம்பிகள் பயந்தார்கள்; நடுங்கி விட்டார்கள்; ஒவ்வொருவராக கரையேறினார்கள். என் அதிகாரத்திற்கு இருக்கும் மதிப்பைக் கண்டு நான் சிரித்துக் கொண்டேன். ஆனால், சற்று நேரத்தில் அந்த சிரிப்பு கோபமாகவும் மாறியது. ஏன் தெரியுமா? ஒரே ஒரு சேரிச் சிறுவன் மட்டும் நான் சொன்னபடி செய்யவில்லை. நீந்திக்கொண்டேயிருந்தான். அவன் தான் செங்கோடன்!

நான் மீண்டும் கத்தினேன். "டேய் செங்கோடா! ஏறடா கரைமேலே! இல்லே, உதை விழும்" என்றேன் அவன் அசையவில்லை! என் கோபம் எல்லைமீறியது. அவ்வளவுதான்; 'தொபீர்' என்று நீரில் பாய்ந்தேன். செங்கோடனை நோக்கி நீந்தினேன். அவன் அருகே சென்றேன். அடுத்தபடியாக என் கோபத்தின் விளைவைஅனுபவித்தான், செங்கோடன். ஆமாம், நான் அவனை அடித்தேன். செங்கோடன் என்னைத் திருப்பி அடிக்கவில்லை. எனக்கு அது பெரிய வெற்றி! அதை விட மிகப் பெரிய வெற்றி — மறுகணமே செங்கோடன் கலங்கிய கண்களுடன் — அடிபட்ட கன்னத்தைத் தடவியபடி கரையேறினான்.

நான் நண்பன் மோகனை அழைத்தேன். அவனும் நீரில் குதித்தான். இருவரும் நீந்தினோம்.

எங்கள் நீச்சல் ஓயவில்லை விருப்பப்படி விளையாடினோம். மோகன் என்னைத் துரத்தினான். நான் அவன் பிடிக்கு அகப்படுவேனா? நீந்திக் கொண்டே சென்றேன். வேகமாக முன்னால் சென்றேன். சிரித்தபடியே விரைந்து சென்றேன். ஆனால் ஒருபெரிய நீர்ச்சுழலை நோக்கி நான் சென்று கொண்டிருப்பதை அப்போது உணரவில்லை.

"ஐயோ! கண்ணா! மேலே போகாதேடா! அங்கே பெரிய சுழி இருக்குடா!" என்று கத்தினான் மோகன். ஆனால் என்ன பலன்? அதற்குள் நான் சுழலை நெருங்கி விட்டேன். சிக்கி விட்டேன். மறுகணம் "ஐயோ" என்று கத்தி விட்டேன்.

என் கதறலைக்கண்ட மோகன் பயந்தே போனான். என்னை நோக்கி வந்தவன் திரும்பினான். கரையை நோக்கி வேகமாகச் சென்றான். ஆபத்தில் சிக்கி விட்ட என்னைக் காப்பாற்ற நினைக்க வில்லை அவன்! 'சுயநலம்' அவனைத் தடுத்து விட்டது!

அதற்குள் நான் வசமாகச் சுழலில் அகப்பட்டுக் கொண்டேன். என் கால்களை யாரோ உள்ளேயிருந்து இழுப்பதைப் போலத் தோன்றியது. நான் "ஐயோ ஐயோ!" என்று கத்தினேன். இரண்டு கைகளையும் மேலே தூக்கிக் கொண்டுக் கதறினேன். அதே சமயம் "தொபீர்" என்று நீரில் செங்கோடன் குதிப்பதும் எனக்குத் தெரிந்தது. 'செங்கோடன் ஏன் குதிக்கிறான்? ஐயோ! என்னை சுழலில் அமுக்கிக் கொல்லவா? நான் அவனை அடித்து விட்டேனே! அந்தக் கோபத்தில் தான் வருகிறான்!'— இப்படி எண்ணினேன். அதற்குள் என் நிலை தடுமாறியது. மீண்டும் அலறினேன். நீரில்மூழ்கினேன். மூழ்கிக் கொண்டேயிருந்தேன்.

★ ★ ★

ஆனால், நான் சாகவில்லை. ஆச்சரியமாக இருக்கும். உண்மைதான்; நான் மீண்டும் கண்களைத் திறந்தேன். அதே சமயம் இரண்டுஅன்புக் கரங்கள் என் கன்னங்களைப் பரிவுடன் தடவிக் கொண்டிருந்ததையும் உணர்ந்தேன். நான் கண்களை அகலத் திறந்து பார்த்தேன்.திடுக்கிட்டேன். நீரில் பாய்ந்து என்னைக் காப்பாற்றி —எனக்கு முதலுதவி செய்து பக்கத்திலேயே இருந்தவன் செங்கோடன்தான்!

நான் திகைத்தேன். என் கைகள் அவன் கன்னத்தில் அறைந்தன! ஆனால், அவன் கைகளோ என்னைக் காப்பாற்றி விட்டனவே! ஏன்? எனக்கு யோசிக்க நேரமில்லை! "செங்கோடா! என் சகோதரா!" என்று கத்தினேன். அவனை இறுகத் தழுவிக் கொண்டேன்.

இன்று, என்னோடு மோகனைப் போன்ற நண்பர்கள் இல்லை. செங்கோடனைப் போன்ற நல்ல தம்பிகளே அதிகம்!

★ ★ ★

**எப்படி? அடித்தான் பணக்காரத் தம்பி. ஆனால், அணைத்தான் ஏழைத் தம்பி. ஏன்? அவன் மனதில் மனிதத் தன்மை இருந்தது. அந்த ஏழைத் தம்பியின் பொன்னான நெஞ்சம்தான் நமக்கும் தேவை. இல்லையா?**

**— சொர்ணம்**

## சிறிய வயதிலே

அழகிய பாரீஸ் நகரம். அதிலே ஒருபள்ளிக்கூடம். அங்கே ஒரு ரசாயன வகுப்பு அறை. அங்கும் இங்கும் ஓடிய வண்ணம் பரிசோதனை நடத்திக் கொண்டிருந்தார்கள் மாணவர்களும் மாணவிகளும். அவர்களிடம்தான் எவ்வளவு சுறுசுறுப்பு!

வகுப்பு நடந்து கொண்டிருந்தது. திடீரென்று 'தடால்' என்றொரு சப்தம் எழும்பியது. அத்தனை பேரும் திடுக்கிட்டார்கள். சப்தம் வந்த பக்கம் பார்த்தார்கள். 'ஆ' என்று துடித்தார்கள். ஏன் தெரியுமா? அங்கே — ஒரு தங்கை — வகுப்பின் முதன்மையான மாணவி— கீழே விழுந்து கிடந்தாள். அவளுக்கு மயக்கம்!

ஆசிரியர் — மாணவர்கள் — மாணவிகள் அத்தனை பேரும் அவள் பக்கம் ஓடினார்கள். முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள். அவள் மயக்கம் தெளிந்து மெதுவாகக் கண்களைத் திறந்தாள்.

"ஏனம்மா மயங்கி விழுந்து விட்டாய்?" — என்று பரிவுடன் கேட்டார் ஆசிரியர்.

அந்தப் பெண் உடனே என்ன சொன்னாள் தெரியுமா? கொஞ்சமும் கூச்சப் படாமல், "பசி மயக்கம் ஐயா! நான் சாப்பிட்டு இரண்டு நாளாகிறது" என்று சொன்னாள்.

அவ்வளவுதான்; உடனே ஆசிரியர் உணவு வரவழைத்தார். பெண் சாப்பிட்டாள். சாப்பிட்டு முடிந்ததும் "நீ வீட்டுக்குப் போய் ஓய்வு எடுத்துக்கொள்! நாளை வரலாம் பள்ளிக்கு" என்றார் ஆசிரியர். ஆனால் அந்தப் பெண் என்ன சொன்னாள் தெரியுமா? "வழக்கப்படி பள்ளி முடிந்தபிறகே செல்கிறேன் ஐயா; எனக்கு படிப்புதான் முக்கியம்!" என்றாள். 'விருட்' டென்று எழுந்தாள். துள்ளிக் குதித்து தன் பரிசோதனையை செய்ய ஆரம்பித்து விட்டாள்.

ஆச்சரியமாக இருக்கலாம்; படிப்பிலேயே கண்ணும் கருத்துமாக இருந்த அந்தப் பெண் யாரென்று அறிய ஆவலாகவும் இருக்கலாம்; அவள்தான், உலக விஞ்ஞானிகளில் ஒருவள் — ரேடியத்தைக் கண்டு பிடித்தவள்—மேடம் க்யூரி.

பெரிய மனிதர்கள்

## கொள்கை விருந்து கோபுரம் போலே!

★

**மதுரை**
28-11-54

பேசுவோர்
மு. கருணாநிதி
எஸ். முத்து
எஸ். எஸ், ராஜேந்திரன்

**திருவிடைமருதூர்**
28-11-54

பேசுவோர்
இரெ. இளம்வழுதி
டி. எஸ். ராசப்பா
டி. ஏ. ராமசாமி

**உசிலம்பட்டி**

பேசுவோர்
29-11-54
மு. கருணாநிதி
எஸ். முத்து
எஸ், எஸ். ராஜேந்திரன்

**மேதூர்**
28-11-54

பேசுவோர்
மூக்கவை ஆர். எஸ். பாண்டியன்
எஸ். எஸ். தென்னரசு
பூங்கோதை

**குடியேற்றம்**

பேசுபவர்
5-12-54
ஈ. வி. கே. சம்பத்

### மதுரையில் கருணாநிதி நிகழ்ச்சிகள்

★

28-11-54
காலை 8-மணி
திருமணம்
" மாலை 4-மணி
திடீர் நகர் வரவேற்பு
" மாலை 7-மணி
பொதுக்கூட்டம்
திலகர் திடல்.

நிகழ்ச்சிகளில் எஸ். எஸ். ராஜேந்திரன் கலந்து கொள்வார்.




## சர்வாதிகாரி ....

★ 5-ம் பக்கம் தொடர்ச்சி

மலேயே அவனது வாய் மூணிற்று.

திடீரென்று; மடைதிறந்த வெள்ளம்போல் ஆயுதம்ஏந்திய வீரர்கள் சிலர் ஓடிவந்தனர். "ஜார் மன்னவரே; உம் நண்பர்கள் சிலர் உம்மை விடுவிக்க முயல்கின்றனர்; எனவே நாங்கள் உம்மைக் கொல்லப் போகிறோம்"—என்று மொழிந்தனர். சொல்லி முடிப்பதற்குள் துப்பாக்கியிலிருந்து சீறி வந்த தோட்டாவொன்று ஜாரின் மார்பைத் துளைத்துவிட்டது. நிக்கோலஸ் மண்ணிலே சாய்ந்தான்...அவ்வளவு தான்; சாய்ந்தது கொடுங் கோன்மை! சாய்ந்தது சர்வாதிகாரம்!!

அதற்குள்ளாகவே மகாராணி நாடி தளர்ந்துவிட்டாள். கூரை இடிந்து விழும்படி கூக்குரலிட்டாள்! எலியைப் பிடித்த பூனை, அதை ஓடவிட்டு பின்னர் கௌவித்தின்னுமே, அதைப்போல, அவளை ஓடவிட்டு கடைசியில் சுட்டுக் கொன்றனர்.

அப்போதும் அவர்களது ஆத்திரம் அடங்கிவிடவில்லை. சவமாகிவிட்ட ஜாரின் பரம்பரையைக் கண்டதுண்டமாக வெட்டி, பெட்ரோலில்நனைத்து அவைகளைப் பொசுக்கி விட்டனர்.

செய்தியறிந்த அமெரிக்க தூதுவராலயம் சும்மாயிருக்கவில்லை. அந்த சர்வாதிகாரியின் சாம்பலை ரகசியமாக பாரிசுக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்தது.

மதமென்னும் 'பூச்சாண்டி' காட்டி, பாட்டாளிவர்க்கத்தின் இதயத் துடிப்பை—இன்பப் பெருக்கை காலிலே போட்டு மிதித்துத் துவைத்த ஜாரைக் கொன்றது லெனினது உத்தரவு அல்ல; யாரோ அவசரக்காரப் புரட்சிக்காரர்கள் சிலர்தான் காவலர்களை ஏமாற்றி அப்படிக் கொடுமை செய்துவிட்டனர்.

சோவியத் அரசாங்கம் பின்னர் அந்த ஏமாற்றுக்காரர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு சரியான தண்டனையையும் வழங்கிவிட்டது!

அதிகார போதையிலே தன்னை மறந்து கூத்தாடும் மமதையாளர்கள் முடிவிலே வெறிநாயைப்போல இப்படித்தான் சுட்டுத் தள்ளப்படுவார்கள் என்பதற்கு ஜாரின் முடிவு ஒரு பாடம்; அபாய அறிவிப்பு!

## புதையல்......

★ 7-பக்கம் தொடர்ச்சி

பாட்டி ஒப்பாரி இடையே நான் — இளம் தளிராக! — எப்படி ஆரம்பமாகியிருக்கிறது பார்த்தீர்களா, என் வாழ்க்கை? இன்னும் பல வேதனைச் சுருள்கள் அடுக்கடுக்காக இருக்கின்றன — தாயை என் தந்தை கொலை செய்தார் என்பது உலகம்கூறும் செய்தி-நீதி தந்த தீர்ப்பு! ஆனால் உண்மை அதற்கு நேர் மாறானது!

## தலையங்கம் தொடர்ச்சி ...

'சிவகாமியின்சபதம்'கல்கிஏட்டிலேமட்டும்தொடர்கதை அல்ல! இந்த நாட்டிலேகூட "சிவகாமியின் சபதம் டில்லி செல்லும் சம்பவம்" பல நாளாக முடியாத ஒரு தொடர் கதைதான்!

அந்தத் துரோகத் தொடர்கதை முடிவு பெறத்தான் நமது நாடு நமக்காக வேண்டும் என்ற விடுதலைச் கிளர்ச்சியின் எழுச்சி முரசு எங்கணும் ஒலிக்கிறது! அந்த முரசு முழங்கும் இலட்சியத்தை அனைவரும் உணரவேண்டும்! அனைவரும் உணர்ந்தால், புது டெல்லிக்கு "சங்கீத நாடக அகாடமி"க்கு தந்திகள் கொடுத்து, கண்டன தீர்மானத்தை அனுப்பத் தேவையில்லை! ஆணவக்காரருக்கு, அலட்சிய புத்திபடைத்தோருக்கு, புல்லுருவிகட்கு, புறக்கணித்திடுவோருக்கு, துரோகிகட்கு, தூய்மையைப் பழிப்போருக்கு, தமிழகத்தை இகழ்ந்தோருக்கு, தமிழர்களை மதியாத மதோன்மத்தருக்கு—நல்லதோர் பாடத்தை—மாநிலம் உள்ளவரையில் மறக்காத பாடத்தை நாமே அளிக்க முடியும்!

டில்லி, நமது தீர்மானங்களை இதுவரை கவனித்ததில்லை! இனியும் கவனிக்கப் போவதில்லை! நாடகக்கழகம், நடிகர் சங்கம் ஆகியவற்றின் தீர்மானங்களை கவனிக்க மறுத்தால், நாடகக்கழகம்-நடிகர் சங்கம்—இவைகள் உடனடியாக நடத்த இருக்கிற போராட்டம் என்ன? என்பதை ஆணவக்காரர்களுக்கு அறிவித்துவிட வேண்டும்! அதுதான்; முத்தமிழ் பெருமையை-தமிழ்நாட்டுக் கலையுலகக் காவலர்களின் பெருமையை உள்ளபடியே உலகுக்கு உணர்த்துவதாக இருக்கும்!

சிவகாமியின் சபதம்-பத்திரிகைத் தொடர்கதை முடிந்துவிட்டது!

முடியாத தொடர்கதை—துரோகத் தொடர்கதை—இடம் பிடிக்கும் தொடர்கதை—முடியாமல் நீண்டுகொண்டே போகிறது, நாட்டில்! அதற்கு, ஏட்டில் தீர்மானம் போட்டால் மட்டும் போதாது!

இங்கே, காட்டில் ஆட்சி நடத்த வேண்டியவர்கள் செங்கோல் பிடித்திருக்கிறார்கள்—அதனால், தீர்மானம்—அதைத் தொடர்ந்து செயல்! செயல்!! செயல்!!!

எங்கே பார்ப்போம்—கலையுலகச் சிங்கங்களே! சீறிக்கிளம்புங்கள்! "சிவகாமியின் சபதங்கள்"—நாட்டில் நடைபெறாமல் ஒரு முடிவு கட்டுங்கள்!

கதையை அல்ல! கருங்காலித்தனத்தை மட்டுமே குறிப்பிடுகிறோம்! நாடகத்தை அல்ல! நாச எண்ணத்தை மட்டுமே குறிப்பிடுகிறோம்!

## சக்கரவர்த்தி திருமகள்...

○ 8-ம் பக்கத் தொடர்ச்சி

யைப் பாருங்கள் என்று நாம், இதே விருந்து விளக்கத்தைத் தந்தோம்-அப்போது பக்தர்கள் சீறிப்பாய்ந்தார்கள்!

இப்போது இனிப்பது, அப்போது கசப்பாகத் தெரிவானேன்? பதில் கூறுவார்களா, பக்தர்கள்? அல்லது, பாத்துவாஜர் விருந்தை விமர்சிக்கும் பார்ப்பன குலமகிபர் ஆச்சாரியார் தான் பதில் கூறுவாரா?

ஆஸ்ரமம்-அங்கே அப்ரஸஸ்களா?
முனிவர் கூடாரம்—அங்கே
மோகக்களியாட்டமா?-
முத்திக்கு வழிதேடும் முகாம்—
அங்கே முத்தத்தால் வீங்கிய
முகங்களா?-
துக்கமான கட்டம் — அங்கே
தொடர்ச்சி கெடாத இன்ப
லோக யாத்திரையா?
தோல்லை நிறைந்த வேளை—அப்
போது எல்லை மீறிய இன்பமா?

### விற்பனையாளர்களுக்கு

எம்மிடம் தி. மு. க, 7 தலைவர்கள்; பொங்கல் பெண்; அண்ணாவும் உழவர் குடும்பமும்; புது மணப் பெண்; பொங்கல் மலர் (16 பக்கங்களுடன்) மற்றும் பல இருவண்ணம், மூவண்ணங்களில் ஆர்ட் தாளில் தீட்டப் பெற்ற பொங்கல் வாழ்த்துக்கள் தகுந்த மேனுரையுடன் விலை 3பை முதல் இரண்டரை அணா வரையில் 25-கழிவுடன் தரப்படும்.

மாதிரிக்கு 12 அணா தபால்தலை அனுப்புக

பகுத்தறிவுப் பண்ணை
பீமநகர் ★ திருச்சி

## கலைத்தோட்டம்...

● 11-ம் பக்கத் தொடர்ச்சி

பாடி, ஓடும் சிற்றோடை; செங்கரும்பு: சிகப்பு ரோஜா!

ஓ ஹென்றியால் இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. சிறைச் சாலையிலேயே அவன் சாக ஆரம்பித்து விட்டான். விடுதலை அடைந்த ஒன்பதாண்டுகளுக்குள் இளைத்து துரும்பாகி அந்த இரத்தினம் மறைந்து விட்டது. அமெரிக்காவிற்கு அணுகுண்டு மட்டுமல்ல; காவியமும் செய்யத் தெரியுமென்று சுட்டிக் காட்டிய அந்த செம்மல் 1910—ல்

★ 2-ம் பக்கம் தொடர்ச்சி

கச் சேர்த்துக் கொண்டேன்—இது ஒரு தவறா? உயர் நீதி மன்றத்தில், கொலைவழக்கு சம்மந்தமாக கூண்டிலேற்றப் பட்ட பிரமுகர் ஒருவரைக்கூட எனது வலது கையாக வைத்திருந்தேன் இது ஒன்று தான் ஆந்திராவில் காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணமென்றால் அந்த வீழ்ச்சிக் காதையின் 'ராஜா பார்ட்' நான் மட்டுமல்ல; நால்வருண்டு — ஆந்திர மோகினியை நால்வரும் தான் காதலித்தோம் - வெற்றி

# கலைத்தோட்டம்

## 22. கதையல்ல; கனிச்சாறு !

★


“முன்னொரு காலத்தில்...அந்தரான காட்டில்.... ஒரே ஒரு ராஜா இருந்தான்”—என்று துவங்கும் கதைகள் இங்கு மட்டுமல்ல; மேலை நாடுகளிலும் இருந்தன. ஒரே ஆசிரியர் ஆயிரம் கதைகளை எழுத நேர்ந்தாலும் அந்த ‘முன்னொரு காலத்தையும்’ ‘அந்தரான காட்டை’யும் விடமாட்டார். அந்த பத்தாம் பசலி பாணியைச் சாடுவதற்குத்தான் ஓ ஹென்றி ஒரு புரட்சிக்கு வித்திட்டான்; வளர்த்தான்; அவன் காட்டிச் சென்றானே அந்தப் புதுவழி, அதிலே சிங்கார நடை போட்டதால்தான் இன்றைய சிறு கதைகள் இலக்கியத்தின் மணி முடியாக — காவியச் சோலையின் கனி உதிர்க்கும் குளிர் தருவாக வளர்ந்திருக்கின்றன.

“நாலைந்து பக்கங்களுள் முடிந்து விடும் சிறுகதையில் எதை எழுதுவது? கடல் போல கத்தும் வாழ்க்கையைப் பற்றி ஒரு நூல் நிலையமல்லவா எழுத வேண்டும்?”—என்று அதட்டிக் கேட்டவர்கள் ஓ ஹென்றியின் எழுத்தோவியங்களைப் பார்த்துத் திகைத்துப் போனார்கள்.

மூன்று நிமிஷக் கதைகளைத்தான் அவன் எழுதியிருக்கிறான்—ஆனாலும் மூவாயிரம் புத்தகங்களைப் படித்த போதிலும் அவைகளிலெல்லாம் அகப்படாத அற்புத பாத்திரங்களை அந்த ‘நொடிக்கதை’க்குள்ளே புகுத்தி விடுவான் !

ஓ ஹென்றியின் பேனா முனை தரும் சிறுகதைகளின் துவக்கமே துல்யமாக இருக்கும்—முதலிரண்டு வார்த்தைகள் கண்ணிலே பட்டு விட்டால் போதும்—படித்து முடிக்காமல் பக்கத்தைத் திருப்ப மனம் வராது; தேனிலே தோய்த்து அப்படி வார்த்தைகளை வார்த்திருந்தான், அவன்!

அவனது கவினூறும் கதை அமைப்பிற்கு, சிலந்தி வலையைத்தான் உவமையாகச் சொல்ல வேண்டும். சிலந்தி வலையின் மென்மை ஓ ஹென்றியின் ‘இரண்டு பக்க’க் கதைகளிலே நிறைந்து கிடந்தது. கதா நிகழ்ச்சிகளின் பின்னலும் அப்படித்தான் — சிலந்தியும் தோற்று விடும், அந்த சிறு கதை வேந்தனுக்கு! இதோ உதாரணத்துக்கு ஒரு சில;



சிறு வயது முதலே நெருங்கிப் பழகிய இரு நண்பர்கள்; சந்தர்ப்பம் காரணமாக இருவரும் ஒரு ஓட்டலில் பிரிகின்றனர். இருவரும் உயிரோடிருந்தால் — இருபதாண்டுகள் கழித்து அதே நேரத்தில், அதே தேதியில் சந்திப்பதென்று உறுதி கொடுத்து போய்விடுகின்றனர். இருபதாண்டுகளும் ஓடி விடுகின்றன. குறித்த நேரத்தில் நண்பர்களில் ஒருவன் ஓட்டலுக்கு வருகிறான் — அந்த இருபதாண்டுகளுக்குள் அவனது வாழ்க்கையிலேதான் எவ்வளவு மாற்றம்! அமெரிக்காவே தேடி அலையும் கொள்ளைக் காரனாக அல்லவா அவன் மாறியிருக்கிறான்! இருந்தும் பழைய நினைப்பு மாறாமல் நண்பனைச் சந்திக்கக் காத்திருக்கிறான். இறுதியாக ஆருயிர்த் தோழனும் வருகிறான்—முன்பு பிரிந்தானே அப்போது அணிந்திருந்த சாமான்ய உடையில் அல்ல; சப் இன்ஸ்பெக்டர் உடையில்! இதுதான் ஓ ஹென்றியின் “இருபதாண்டுக்குப் பிறகு!” என்கிற கதை!

நாலாறு மாதங்கள் படுத்த படுக்கையாகக் கிடந்து — ஈளை கட்டி—மூச்சுத் தடுமாறி பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக செத்துத் தொலையும் காட்சியைப் போல ஓ ஹென்றி தன் கதைகளை அர்த்தமில்லாமல் அகட்டிச்சென்று முடிக்க மாட்டான். கதாபாத்திரங்கள் சாக வேண்டுமென்று தெரிந்ததும், சுட்டு விடுவான்! கதைக்கு அவன் முற்றுப் புள்ளி வைப்பதும் அவ்வளவு மோகனமாயிருக்கும்! கதாநாயகனுக்குக் கல்யாணம் ஆகி—குழந்தை குட்டிகள் பெறும்வரை கதையை நீட்டச் சொல்லி, அந்த சுவையை அனுபவித்துப் பழக்கப் பட்ட நம் நாட்டு மக்களுக்கு ஓ ஹென்றி ஒரு புதுமை — கும்மிருட்டிலே ஒளிவிடும் குத்து விளக்கு! இதோ இன்னுமொரு கதை:

பொழுது விடிந்தால் கிருஸ்த்மஸ் விழா. காதலன் தன் காதலிக்கு, அவள் திடுக்கிடும் அளவுக்கு புதிதாக ஒரு பரிசு தர நினைக்கிறான். அவளும் அப்படித்தான் - பரிசு கொடுக்க துடியாய்த் துடிக்கிறாள் - பாவம்! அவர்கள் கையிலோ ஒரு செம்பு நாணயம் கூட கிடையாது! இருந்துமென்ன; வாலிப உள்ளங்களின் ஆசையாயிற்றே நிறைவேறாமல் இருக்குமா? காதலி தன் அழகான கூந்தலை வெட்டி அதை விற்று தன் காதலன் கையிலே அணிந்திருக்கும் கடிகாரத்திற்கு தங்கச் சங்கிலி வாங்குகிறாள்!

அவனோ, தன் கைக் கடியாரத்தை விற்று தன் காதலிக்கு தங்கப்பிடி போட்ட சீப்பு ஒன்றை வாங்குகிறான் — மறுமுறை சந்திக்கும் போது காதலர்கள் பரிசை மாற்றிக் கொள்கின்றனர் — எப்படி இருக்கும் அவர்களது உள்ளம்?

இப்படித்தான் ஓ ஹென்றியின் கதைகள் ஒவ்வொன்று வாழ்க்கையின் பிரதி பலிப்பாய் ஓரங்க நாடகம் போல காட்சி தந்தன. அந்த மேதையின் வாழ்க்கை ஏட்டைக் கொஞ்சம் திருப்புங்கள்; ஒரே சோகம்! சோகம்!!

மூன்று வயதிலேயே தாயை இழந்தான். பையனை படிக்க வைக்கக்கூட தந்தை சம்பாதிக்க வில்லை. அத்தையின் ஆதரவால் வளர்ந்து மனிதனானான். மனிதனாக முடிந்ததே தவிர தனக்கு இஷ்டப்பட்ட வாழ்க்கைத் துறையை அவனால் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியவில்லை — வாழ்நாள் முழுதும் இறகு ஒட்டும் குமாஸ்தாவாகத்தான் வாழ்ந்தான்! இன்னல் நிறைந்த அந்த குமாஸ்தா வேலையை விட்டொழித்து ஓ ஹென்றி எழுத்துத் துறையிலே புகுந்திருந்தால் ஏற்றமிகு கதைகள் பல இந்த உலகிற்குக் கிடைத்திருக்கும்!

34-வது வயதில் அவனது வாழ்க்கைப் பூங்காவிலே புயல் புகுந்தது- சக உத்யோகஸ்தன் ஒருவன் செய்த பெரும் பிழை ஓ ஹென்றியின் தலையிலேவிழுந்தது, பாங்கிப் பணத்தை யாரோ ஏப்பமிட்ட குற்றத்திற்கு ஓ ஹென்றி பதில் சொல்ல வேண்டியிருந்தது. அப்பாவியான ஓ ஹென்றியால் இந்தக் குற்றச் சாட்டைத் தாங்க முடியவில்லை. ஊரை விட்டே ஓடிவிட்டான்.

ஊரை விட்டு ஓடாமல், கோர்ட்டாரிடம் ஆஜராகியிருந்தால் ஓ ஹென்றி நிரபராதியென்று நிரூபிக்கப் பட்டிருப்பான்! சட்டத்தின் பிடியிலிருந்து எத்தனை நாட்கள் தப்ப முடியும்? ஓ ஹென்றிக்கு ஐந்து ஆண்டுகள் சிறைவாசம் கிடைத்தது,

சிறைவாசம்தான் அந்தக் கூழாங்கல்லுக்குப் பட்டை தீட்டியது. ஒரு கையால் இரும்புக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையால் பேனாவை ஏந்தி அவன் எழுதிய கதைகள்தான் இன்றைய சிறு கதை இலக்கியத்தின் புகழ்

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

---

### குற்றவாளி யார்?

★

மாக்ஸ் ஸ்டீயர் என்பவர் புகழ்வாய்ந்த கிரிமினல் வக்கீல். ஏதாவதொரு வழக்குக்கு அவர் ஆஜராகிறாரென்றால், உடனே அந்த கேஸ் வெற்றிதான் என்று பச்சைக் குழந்தைகள் கூட தைரியமாகச் சொல்லி விடலாம்; அவ்வளவு திறமையானவர், அவர்!

ஒரு தடவை மாக்ஸ் ஒரு கொலை வழக்கிற்கு ஆஜராக வேண்டியிருந்தது. எவ்வளவு தான் நுட்பமாக வாதித்த போதும் தன் கட்சிக்காரன் தண்டனையிலிருந்து தப்ப முடியுமா என்பதைப்பற்றி அவருக்கு சந்தேகம் தோன்றி விட்டது.

உடனே அவர் ஜூரிகளில் தன் நண்பரான ஒருவரை அழைத்து, மிகவும் வினயமாக, “இந்த வழக்கைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? என் கட்சிக்காரன் நிரபராதி தானே?” என்று கேட்டார்.

ஜூரரிடமிருந்து ஒரு திடுக்கிடும் பதில் வந்தது. அவர் சொன்னார்: “எப்படி அவன் நிரபராதியாக இருக்க முடியும்? அவன் நிரபராதியாக இருந்தால், ஏன் குற்றவாளிகளையே தப்புவிக்கும் உம்மை வக்கீலாக வைக்க வேண்டும்? நிச்சயமாக அவன் குற்றவாளியாகத்தான் இருக்க வேண்டும்.”

அதற்குமேல் மாக்ஸ் அவரிடம் பேசவில்லை.

— மில்வாக்கி ஜர்னல்

---

### புதிதாக வாங்கிய காரைப்பற்றி...

●

தந்தை: ஒரு காலன் பெட்ரோலுக்கு எத்தனை மைல்கள் போகும்?

தாய்: காரின் வர்ணம் கண்ணுக்கு கவர்ச்சியாக இருக்குமா?

மகள்: காரில் சிகரெட் பிடிக்க வசதி செய்யப் பட்டிருக்கிறதா?


மகன்: கார் மணிக்கு 80-மைல் வேகம் போகுமா?

அடுத்த வீட்டுக்காரன்: பக்கத்து வீட்டுக்காரனா? புதிதாக கார் வாங்குகிறானா? ஏது அவனுக்கு இவ்வளவு பணம்?

— காரனட்

SOUTHERN NEWS 23 Narasi Parao Str MADRAS
26.11.54

# கடைசிப்பக்கம்




14-11-54 ல் சிதம்பரம் அண்ணுமலை நகர் கூட்டத்திற்குச் சென்றுவிட்டு, திருவாரூருக்குச் சென்று என் செல்வனைப் பார்த்துவிட்டு, சென்னை திரும்பினேன். திருவாரூரில் இரவு 10-மணி வண்டிக்குப் புறப்பட்டு, மாயவரம் 12-மணிக்கு வந்து அங்கிருந்து சென்னைக்கு டிக்கெட் எடுத்து உடனே ரயிலில் ஏறிவிட்டேன். மாயவரத்தில் காவேரி நதியில் தெய்வீகத் தீர்த்த முழுக்குத் திருநாளாம். அதிலே பக்தர்கள் — யாத்ரீகர்கள் முழுகி பாபத்தை தொலைக்கிருர்களாம். அதற்காக 'யாத்திரை வரி' என்ற பெயரில், ஒவ்வொரு பிரயாணியிடமிருந்தும். மேலே கண்ட டிக்கட் ஒன்றைக் கொடுத்து மூன்றணு வசூலித்துக் கொள்கிருர்கள்! யாருடைய பாபத்தையோ தொலைக்க, நான் ரயில்வே நிர்வாகத்துக்கு கொடுத்த காணிக்கை யாத்திரை வரியின் மூலம் மூன்று அணு. டிக்கட் அன்னியில் இப்படிப்பல மூன்ருணு இரண்டணுக்களை எந்தப் பாவமு மறியாத பலர் ரயில்வே நிர்வாகத்திற்குக் கொட்டி அழுகிருர்கள்.

நான் மட்டுமா மூன்ருணு கொடுத்தேன்? இங்கள் மதத்தைத் தவிற வேறெந்த மதத்தையுமே ஒத்துக்கொள்ளாத கிருஸ்தவர்கள்—இந்து மதக் கடவுள்களின் மேல் நம்பிக்கை வைக்காத முஸ்லிம்கள்—இவர்கள் எல்லோருமே 'மாயவரம் முழுக்கிற்கு' மூன்ருணு கொடுத்து—தீர வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கின்றனர், அரசினர்.

"கடல் கடந்து வந்த கிருஸ்தவ பாதிர்கள் சிலரை மதம் மாற்றுகின்றனர்" என்று ஓலமிடும் 'பக்த கோடிகள்' மாயவரத்தைக் கடந்து தீர வேண்டிய ஒரே காரணத்துக்காக இந்து மதச் சாக்கடையைவிட்டு ஒதுங்கிச் செல்பவர்கள்மீது போடப்படும் இந்தக் "கட்டாய இந்துமத முத்திரை" யைப் பற்றி ஏனே வாயைத் திறக்க மறுக்கின்றனர்!

மதவெறி கொண்ட ஔரங்கசீப் விதித்த ஜெசியா வரிக்கும், தேசியத் திருவாளர்கள் விதிக்கும் இந்த 'யாத்ரீக' வரிக்கும் என்ன வித்யாசமோ? நமக்குத் தெரியவில்லை.

— கருணாநிதி

உண்மைத்தமிழன் —
திருவல்லிக்கேணி.

(?) மனோகரா படத்தில் — கருணாநிதி "சினிமா" என்ற ஆங்கில வார்த்தையை வசனத்தில் உபயோகித்திருப்பதாக ஒரு சினிமா பத்திரிகை எழுதியிருக்கிறதே; உண்மையா?

ஒரு கடைந்தெடுத்த செவிடரை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகை போலும் அது!

"கற்பனைக் கதையல்ல நீங்கள் காணப்போவது! சிந்தனைச் சித்திரம். சிங்காரியால் சீரழியும் ஒரு சாம்ராஜ்ய சரித்திரம்!" என்ற வசனங்கள் "சினிமா சரித்திரம்" என்று திருட்டு புத்தகம் வெளியிடுபவர் காதில்தான் விழுந்தது என்ருல் இந்த செவிட்டு நண்பர் காதிலும அப்படியே விழுந்திருக்கிறது போலும்! அந்தோ பரிதாபம்!

அ. துரை ராசு—
ராசகோபாலன் பட்டி

(?) கற்பனை—போய் — இரண்டுக்கும் வித்தியாசம் உண்டா! இல்லையா? எப்படி?

உண்டு! வேதனைச் சேதி கேட்டு அவளது விழி குளமாயிற்று என்பது கற்பனை!

பரமசிவன், நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்தார் என்பது பொய்!

எஸ். காந்தி — பூதக்குடி.

(?) கண்ணகி, மாதவி இவர்களில் யார் கற்புக்கரசி?

திருக்குறள் — சிலப்பதிகாரம் — இரண்டில் எது தமிழ் நூல் என்று கேட்பது போலிருக்கிறது இந்தக் கேள்வி.

இர. மணி — சூளை.

(?) மணமில்லா மலரையும், அழகில்லா மங்கையையும் சிலர் விரும்பக் காரணம் என்ன!

மனதுக்குப் பிடிப்பதால் — மனதுக்குப் பிடிப்பதால்!

"இனியன்" —
பெங்களூர் கண்டோன்மெண்ட்

(?) ஆரியர்கள், தென்னுட்டில் குடியேறுவதற்கு வசதி செய்த அரசன் யார்! விபரம் கூறுக.

கி. மு. 7500ல் தென்னுட்டில் முதுகுடுமிப் பெருவழுதி என்ற அரசன், பாண்டியர் ஆட்சியை தோற்றுவித்தான். அவன் தான் ஆரியர்களை வடக்கேயிருந்து தென்னுட்டில் குடியேறும் படி செய்தவன். ஆரியர்களின் விருப்பம் போல் பல நூறு யாகங்களையும் செய்தான். அவர்களுக்குப் பல ஊர்களையும் கொடையாக வழங்கினன், அதனல் ஆரியர்கள் அவனுக்குப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பட்டத்தை அளித்தார்கள் என்பது வரலாறு.

சந்தனம்மா — கும்பகோணம்.

(?) ஆரியர்கள் தமிழர்கள் மீது படை யெடுத்துப் போர் செய்து வெற்றி பெற்ருர்கள் என்று எங்கள் பள்ளிப் பார்ப்பன ஆசிரியர் கூறுகிருர். தங்கள் கருத்தென்ன?

என் சொந்தக் கருத்து இருக்கட்டும்; இதோ — "வேத காலத்து இந்தியா" என்ற புத்தகத்தில், 298ம் பக்கத்தில் இருக்கும் வாசகங்களை அவருக்கு எடுத்துக் காட்டுங்கள்.

"தென் தமிழ் நாட்டில், ஆரியர்கள் புகுந்தது படையெடுப்பினுல் அல்ல. தமிழ் அரசர்களையும் தமிழ்வள்ளல்களையும் தம் சூழ்ச்சிக்கு உட்படுத்தி, வேள்வி முதலிய ஆடம்பர வாழ்க்கையினுல் தென்னுட்டில் நிலைத்து விட்டார்கள்" என்று அந்த நூலில் கூறப்பட்டிருக்கிறது.

## கருணாநிதி சுற்றுப்பயண அறிவிப்பு

★

வாரம் ஒரு கூட்டத்தில் நான் பேச இயலும் என்ற உடல் நிலைக்கேற்றவாறு, வாரம், ஒரு கூட்டம் வீதம், மே மாதம் மூன்ரும் ஞாயிற்றுக்கிழமை முடிய கூட்டங்களுக்கு ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. கடிதமூலமும். நேரிலும் தேதி பெற்றுக்கொண்ட தோழர்கள் உடனே அந்தத் தேதியின் உறுதி குறித்து கடிதம் எழுதி தேதியை நிச்சயப் படுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

அன்பன்
மு. கருணாநிதி.

★ முரசொலி ★

★

பொங்கல் மலர்

★

★ மலருக்கான வேலைகள் துவங்கிவிட்டன. கட்டுரைகள், கதைகள், கவிதைகள்—கருத்துப் புதையல் களாக குவிந்து கொண்டிருக்கின்றன.

★ கருணாநிதி மலரில் **பெரியதோர் நாடகம்** எழுதுகிருர் என்ற புதுச் செய்தியையும் பூரிப்புடன் தருகிருேம்.

★ ஓவியங்கள் பாதிக்குமேல் தயாராகி விட்டன.

★ 'அவாள்' ஏடுகளுக்கும், மலர்களுக்கும் ஒரு அறை கூவலாக நமது மலர் இருக்க வேண்டுமென்ற தோழர்களின் ஆசையைப் பூர்த்தி செய்யும் விதத்திலே முயற்சி நடைபெறுகிறது.

★ அருமை நண்பர் முல்லைசத்தி அவர்கள் சென்னையிலே தங்கி, மலர், மணமுடன் திகழ பணிபுரிகிருர்.

★ எண்ணக் குவியலாய்—வண்ணச் சித்திரங்களுடன் வர இருக்கும் பொங்கல் மலருக்கு இப்போதே உங்களூர் விற்பனையாளரிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**மலரின் விலை 2. ரூபாய்தான்!**

மு. கருணாநிதியால் 'முரசொலி' அச்சகத்தில் அச்சிடப்படுகிறது.
அலுவலகம்: 62, எஸ். பி. சன்னதி தெரு, ராயப்பேட்டை, சென்னை—14.